லை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

ங்கள்: பத்து

, 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 19 ஞாயிற்றுக்கிழமை (01.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 165




## ருணா, பிள்ளையான் விவகாரம்

## ர்வதேச மன்னிப்புச் சபையின் கோரிக்கையை ங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது–திவயின

(கொழும்பு)

ழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் ந் தளபதி கருணா அம்மான் மற்றும் ைதைய கிழக்கு மாகாண முதலமைச் ளையான் ஆகியோருக்கு எதிரான கள் தொடர்பான விசாரணைகள் ாள்ளப்பட வேண்டும் என சர்வதேச புச் சபை விடுத்த வேண்டுகோளை கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை கள் பிரித்தானியாவில் இருந்தபோது சர்வ தேச மன்னிப்புச் சபை மௌனம் காத்ததாக இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான ஓர் சூழ்நிலையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஒரு தலைப்பட்சமான கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாதென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக திவயினப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ந-5)

## மூதூரில் ஊர்காவற்படை வீரர் சுட்டுக்கொலை பதில் தாக்குதலில் நான்கு பொதுமக்கள் காயம்

### கிளிவெட்டியிலும் ஒருவர் கொலை; தமிழ் கிராமங்களில் பதற்றம்

(மூதூர்)

மூதூர், நிலாப்பொலவில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து அங்குள்ள தமிழ் கிராமமான கங்குவேலிக்குள் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்திலும் வன் முறையிலும் நான்கு பொதுமக்கள் படுகாய மடைந்துள்ளனர்.

அத்துடன் நேற்று மதியம் கிளிவெட்டி யிலும் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவங்களையடுத்து அப் பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவுகின்றது.

மூதூர் நிலாப்பொலவில் நேற்று முன் தினம் இரவு 8 மணியளவில் மோட்டார் சைக் கிளில் வந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

# னநாயக - மனித உரிமைகளை இலங்கை அரசு பேண வேண்டும்

## மெரிக்கா வலியுறுத்தல்

(ொழும்பு)

ித உரிமைகளும் ஜனநாயகமும் மேம்பட வேண்டிய ளில் இலங்கையும் அடங்கியிருப்பதாக அமெரிக்கா தெரி ள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ில் அங்கத்துவத்தை இலங்கை இழந்த பின்னர் அமெ இவ்வாறு தெரிவித்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழுவில் ரி.எம்.வி.பியை இணைத்துக் கொள்ள ஜனாதிபதி முடிவு

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு அமைக் கப்பட்டுள்ள சர்வகட்சிக் குழுவில் ரி.எம்.வி.பி. கட்சியின் பிரதிநிதியாகப் பிள்ளையான் தரப் பினையும் இணைத்துக் கொள்ள ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை அடுத்த வாரம் நடைபெற வுள்ள சர்வகட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டத் தில் பிரதிநிதி ஒருவரை பங்குபற்றச் செய்யு மாறு ஜனாதிபதி, கிழக்கு மாகாண முதல மைச்சரான சிவநேசதுரை சந்திரகாந்த னுக்கு (பிள்ளையானுக்கு) அறிவித்துள்ளதாக அரசாங்க வட்டாரம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இவ்வாறான தீர்மானத் தின் காரணமாக (10 ஆம் பக்கம் பார்க்க)

## ட்ஸுக்கு அதிகமான மிழ்களுக்குத் தடை

ரப் பாவனையை கட்டுப்படுத்தும் 5 வோட்ஸ் மின் அழுத்தத்திற்குக் மின் குமிழ்களை தடை செய்வது அரசாங்கம் ஆலோசித்து வருவ வருகின்றது. 75 வோட்ஸுக்கு அதிக அழுத்தத்தை கொண்ட மின் தடை செய்வதற்கு இலங்கை மின் மானித்துள்ளது. இது தொடர்பான ிட்டம் சட்ட வரைபுகளுக்காக மின் தி அமைச்சினால் அனுப்பி வைக் ாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## பாடசாலை நாள்களை வாரத்தில் 4 நாள்களாக்க கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

ஒரு வாரத்தில் பாடசாலை நாள்களை 4 நாள்களாகக் குறைப்பதற்குக் கல்வி அமைச் சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு; ஆசிரி யர் தொழிற்சங்கங்கள் மற்றும் பெற்றோர் கள் உள்ளிட்ட பல தரப்புடனும் பேச்சுவார்த் தை நடத்தியுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தின் காரண மாகவே இந் நடவடிக்கை எடுக்கப்படுவதா கவும் இவ்வாறு பாடசாலை நாள்களை வாரத்தில் நான்கு நாள்களாக்குவதன் மூலம் போக்குவரத்துக்குத் தேவையான டீசலை மீதப்படுத்த முடியும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெஜி ரணதுங்க காலமானார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ரெஜி ரண துங்க (வயது-71) நேற்றுக் காலமானார்.

இவர் இலங்கைத் துடுப்பாட்ட அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய நாடாளு மன்ற உறுப்பினருமான அர்ஜுன ரணதுங்க வின் தந்தை ஆவார்.

1989 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்திற்கு முதன்முறையாகத் தெரிவு செய்யப்பட்ட அவர், பின்னர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# ன்னியிலுள்ள தமிழரை மீட்க ரசாங்கம் உறுதியாகவுள்ளது

## கப்பூர் மாநாட்டில் பாலித கோஹன்ன

(கொழும்பு)

ுத்தம் என்பது ஆயுதக்களை ர்புபடுத்தப்பட வேண்டும். அர சுவார்த்தைகள் நடைபெறும் ுயான மேற்பார்வையின் கீழ் ளவுக்கான நடவடிக்கைகளும் ண்டும். ஆனால் இலங்கையில் அந் நிலை இல்லை இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன கூறியுள்ளார்.

நாம் இப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண விரும்புகிறோம். ஆனால் இதுவரை அவர்கள் (புலிகள்) ஆக்க பூர்வமான பேச்சுவார்த்தைக்கான விருப்பத் தை வெளிப்படுத்தவில்லை எனவும் அவர் கூறினார்.

சிங்கப்பூரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பாதுகாப்புத் தொடர்பான மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்பப் பல் கலைக்கழகத்தில் இடம்பெற்ற இந்த மாநாட் டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலி களின் பயங்கரவாத யுத்தத்திற்கு முகம் கொ டுத்துப் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. கடந்த 30 வருடங்களாக இலங்கை மக்கள் இந்த யுத்தத்திற்கென அளவு கடந்த விலை களைக் கொடுத்துள்ளனர்.

பொதுமக்களை (10 ஆம் பக்கம் பார்க்க)

வு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இறுதிப் போட்டிக்கு சென்னை அணியும் தகுதி;

## துடுப்பாட்டத்தில் சொதப்பிய யுவராஜ் அணி வெளியேறியது

(மும்பை)

பார்த்திப் பட்டேல், ரெய்னாவின் சிறப்பான துடுப்பாட்டத்தால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் நேற்றிரவு நடைபெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் மோதின.

இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யுவராஜ் சிங் முதலில் துடுப்பாட்டத்தை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி நிற்னி, ஹோனி மற்றும் மோர்கல் கூட்டணியின் துல்லியமான வேகத்தால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் ஆட்டமிழக்காமல் பவார் 21 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 28 ஓட்டங்களையும் மோட்டா 25 ஓட்டங்களையும் மார்ஷ் 23 ஓட்டங்களையும் மற்றும் சாவ்லா 12 ஓட்டங்களையும் எடுத்தனர்.

முன்னணித் துடுப்பாட்ட வீரர்களான ஹோப்ஸ்(2) சங்கக்கார (3) யுவராஜ் சிங் (4) ஜெயவர்தனா (8) மற்றும் இர்பான் பதான் (3) ஓட்டங்கள் என ஒன்றை இலக்குடன் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் நிற்னி, ஹோனி மற்றும் மோர்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் முரளிதரன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் சென்னை அணியின் ஆரம்பப் பந்து வீச்சாளராக சுழல் பந்துவீச்சாளர் முரளிதரன் முதலாவது ஓவரை வீசியமை குறிப்பிடத்தக்கது.

பதிலுக்கு 20 ஓவர்களில் 113 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பட்டேல், ரெய்னாவின் சிறப்பான ஆட்டத்தினால் 14.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 116 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களால் எளிதாக வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதில் சுரேஷ் ரெய்னா 34 பந்துகளில் (4 பவுண்டரிகள் 4 சிக்ஸர்கள் உட்பட) 55 ஓட்டங்களையும் பார்த்திப் பட்டேல் 48 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 51ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

இவ்வெற்றியின் மூலம் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை தோல்வி அடைந்த யுவராஜ சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி அரையிறுதியுடன் விடை பெற்றது. (5)

## இறுதிப்போட்டியில் இன்று ராஜஸ்தான்-சென்னை மோதல்

(மும்பை)

இந்தியன் பிரிமியர் லீக் இருபது -20 தொடரின் இறுதிப் போட்டியில் இன்று தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதுகின்றன.

இரு அணிகளும் லீக் சுற்றில் மோதிய இரண்டு போட்டிகளிலும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றி பெற்றது.



தோனி



வோர்ன்

அத்துடன் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இதுவரை பங்கேற்ற 15 ஆட்டங்களில் 12 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது.

சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இதுவரை தான் ஆடிய 15 ஆட்டங்களில் 9 போட்டிகளிலேயே வெற்றி பெற்றுள்ளது. இதேவேளை நேற்றைய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை வீழ்த்திய உற்சாகத்துடன் இன்று ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ஐ.பி.எல் கிண்ணத்தை தட்டிச் செல்லுமா? அல்லது ஷேன் வோர்ன் புது வியூகங்களை அமைத்து வெற்றி பெறுவாரா? என ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்க்கப்படுகிறது.

இறுதிப்போட்டி இன்று இரவு 8 மணிக்கு ஆரம்பமாகின்றது. (5)

## ஐ.பி.எல் போல ஐ.டி.எல்

(டில்லி)

ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளைப் போல டென்னிஸிலும் லீக் போட்டிகளை நடத்தும் உத்தேசத்தோடு இந்தியன் டென்னிஸ் லீக் (ஐ.டி.எல்) உருவாக்கப்பட்டுள்ளது.

கிரிக்கெட் சபை இருபது போட்டிகளை நடத்த ஐ.டி.எல் என்னும் புதிய அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் ஐ.பி.எல் போட்டிகள் வெற்றிபெற்று பரவலான கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்நிலையில் இந்தியன் டென்னிஸ் சங்கமும் டென்னிஸ் உலகில் ஐ.பி.எல்லுக்கு எதிரான லீக் போட்டியை நடத்த தீர்மானித்துள்ளது.

இதற்காக இந்தியன் டென்னிஸ் லீக் என்னும் தனி அமைப்பை ஏற்படுத்தி 4 நகர அணிகளுக்கு உரிமைகளை வழங்கி போட்டிகளை நடத்த உத்தேசித்துள்ளது.

ஒவ்வொரு அணியிலும் 2 வெளிநாட்டு வீரர்கள் இடம்பெறவுள்ளனர். ஒற்றையர், இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் ஆட்டங்கள் நடை பெறவுள்ளன.

இந்தியாவில் உள்ள இளம் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு புதிய வாய்ப்பை ஏற்படுத்திதரும் நோக்கத்தோடு ஐ.டி.எல் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

சர்வதேச முன்னாள் டென்னிஸ் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இதில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இந்திய கிரிக்கெட் சபையின் ஆலோசனையை பெறவும் இந்திய டென்னிஸ் சங்கம் முடிபு செய்துள்ளது. (5)




## ஹட்ரிச் சதம், வலுவான நிலையில் ஆஸி.

(அன்ரிக்குவா)

சைமண் ஹட்ரிச் சதம் கடக்க 2-வது டெஸ்டில் முதல்நாள் ஆட்ட நேர முடிபில் அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை எடுத்தது.



ஹட்ரிச்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் வெற்றி பெற்று அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க 2-வது டெஸ்ட் நேற்று முன்தினம் அன்ரிக்குவாவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணி சைமண் ஹட்ரிச் 113 ஓட்டங்களுடனும் மைக்கல் கிளார்க் 65 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடி வருவதுடன் முன்னதாக அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 65 ஓட்டங்களையும் ஜக்கீஸ் 17, ஹசி 10 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ரெய்லர்,பிராவோ மற்றும் சமி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இரண்டாம் நாள் ஆட்டம் இலங்கை நேரப்படி நேற்றிரவு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (5)

## பிரெஞ் ஓபன் டென்னிஸ் வில்லியம்ஸ் சகோதரிகள் அதிர்ச்சித் தோல்வி

(பரிஸ்)





பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டிகள் பரிஸில் நடைபெற்று வருகிறன.

நேற்று முன்தினம் நடந்த பெண்களுக்கான மூன்றாவது சுற்றுப்போட்டிகளில் வில்லியம்ஸ் சகோதரிகள் அதிர்ச்சித் தோல்வி அடைந்து வெளியேறினர்.

அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ், செரீனா வில்லியம்ஸ் டென்னிஸ் உலகில் கலக்கல் சகோதரிகளாக வலம்வந்தனர்.

இவர்களது ஆதிக்கம் தற்போது முடிபுக்கு வர ஆரம்பித்துள்ளது.

பரிஸில் நேற்று முன்தினம் நடந்த பிரெஞ் ஓபன் போட்டியின் செரீனா வில்லியம்ஸ், சுலோவாக்கியாவின் காட்ரினா சிரிபோட்டினிக்கிடம் 4:6, 4:6 என்ற நேர் செற்களில் தோல்வி அடைந்தார்.

மற்றொரு போட்டியில் வீனஸ் வில்லியம்ஸ் இத்தாலியின் பிளவியா பெண்ட்டாவிடம் 5:7, 3:6 என்ற கணக்கில் தோல்வி அடைந்தார். தர வரிசையில் 5 மற்றும் 8ஆம் இடத்திலுள்ள வில்லியம்ஸ் சகோதரிகள் தரவரிசையில் பின்தங்கியுள்ளவர்களிடம் தோல்வி அடைந்தமை டென்னிஸ் பார்வையாளர்களை வியக்க வைத்துள்ளது. (5)

## 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்தார் ரிக்கி பொன்டிங்

(அன்ரிகுவா)



அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் டெஸ்ட் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

அன்ரிக்குவாவில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான 2-வது டெஸ்ட்டில் நேற்று முன்தினம் முதலாவது இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் 65 ஓட்டங்களை எடுத்தார்.

இதில் ரிக்கிபொன்டிங் 61 ஓட்டங்களை எடுத்த போது டெஸ்ட் கிரிக்கெட்டில்10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்து டெஸ்ட் வரலாற்றில் இவ் இலக்கை அடைந்த 7-வது வீரர் என்ற சாதனையுடன் 2-வது அவுஸ்திரேலிய வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.


இப்போட்டியுடன் 118-வது டெஸ்ட் போட்டி யில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்துள்ள ரிக்கிபொன்டிங் அவ் இலக்கை குறைந்த போட்டிகளில் கடந்த 2-வது வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.

முன்னதாக முன்னாள் மேற்கிந்திய வீரர் பிரைன் லாரா 111 போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார்.

மேலும் முதலாவது டெஸ்டில் பொன்டிங் 36-வது சதமடித்து முன்னாள் இந்திய வீரர் கவாஸ்கரின் 35 சதங்கள் என்ற சாதனையை முறியடித்தார்.

இவ்வரிசையில் டெஸ் கிரிக்கெட்டில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் 39 டெஸ்ட் சதங்களை அடித்துள்ளார். (5)


# சிறுத்தீவுத் தாக்குதல் எழுப்பும் கேள்விகள்



இந்து சமுத்திர பிராந்தியத்தை நோக்கி கூர்மையடையும் உலகின் பூகோள அரசியல் இலங்கை இனப்பிரச்சனையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்ற அறி குறிகள் தென்படுகின்றன.

கடந்த 21 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமை சபையில் இருந்து இலங்கை வெளியேற்றப்பட்ட பின்னர் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் பல தரப்பட்ட கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. கடந்தமுறை ஐ.நா. மனித உரிமை சபையின் உறுப்புரிமைக்காக நடைபெற்ற தேர்தலில் 123 வாக்குகளை பெற்றிருந்த இலங்கை இந்த முறை 101 வாக்குகளுடன் தோல்வியை தழுவிக் கொண்டுள்ளதும், பொதுநலவாய நாடுகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட பாகிஸதான் மனித உரிமைச்சபை வாக்கெடுப்பில் வெற்றியீட்டியதும் குறிப்பிடத்தக்க மாற்றங்களாகும்.

மேலும் இலங்கையில் நடைபெறும் போரில் மக்கள் பெருமளவில் கொல்லப்படுவது தொடர்பாக ஐ.நாவின் பாதுகாப்புச்சபை தனது கவனத்தை செலுத்தியுள்ளது. கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற அதன் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை, சோமாலியா, சூடானின் டார்பர் பகுதி, பலஸ்தீனத்தின் காசா பகுதி, கொலம்பியா ஆகிய நாடுகளில் உள்ள மக்கள் போரினால் கடுமையான பாதிப்புக்களை அனுபவித்து வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




இத்தகைய மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவோர் மீது போரியல் குற்றம், இன்அழிப்பு போன்ற குற்றங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான கடுமையான கருத்துக்களை ஐ.நா. செயலாளர் நாயகத்தின் மனிதாபிமான பணிகளுக்கான பிரதிநிதி ஜோன் கோல்ம்ஸ் தெரிவித்திருந்தார். அதேநேரம் உலகளாவிய ரீதியில் மக்களை பாதுகாப்பதற்காக உத்தியோகப் பற்றற்ற நிபுணர் குழு ஒன்றை அமைப்பதற்கு பாதுகாப்பு சபை தீர்மானித்துள்ளது.

போரில் பாதிக்கப்படும் பல மில்லியன் மக்களுக்கு உதவும் முகமாக இந்த நிபுணர் குழு அமைப்பது முன்னேற்றகரமானது என கோல்ம்ஸ் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத் தக்கது.

இதனிடையே மனித உரிமை மீறல்கள் மோசமடைந்துவரும் நாடுகளில் இலங்கையும அடங்குவதாக அனைத்துலக மன்னிப்புச் சபை தனது 2008 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது. பலவந்தமாக காணாமல்போகச் செய்தல் , நீதிக்கு புறம்பான படுகொலைகள், எழுந்தமானமான கைதுகள், துன்புறுத்தல்கள் என்பன 2007 ஆம் ஆண்டில் இலங்கையில் மோசமடைந்து காணப்பட்டுள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

தீவிரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளில் மக்கள் பலவந்தமாக காணாமல் போகின்றனர் என்றும் படையினரோ்டு இணைந்துள்ள ஆயுதக்குழுவினரே இந்த கடத்தல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை மீதான மேற்குலகத்தின் அழுத்தங்கள் படிப்படியாக அதிகரித்து வருகையில் அரசின் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பான வெளிப்படையான கருத்துக்களும் தலை தூக்கி வருகின்றன. இலங்கை அரசு மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ளதாக அதன் வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளது முக்கியமானது.

அரசின் இந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் கடந்த வியாழக் கிழமை அதிகாலை வடபோர்முனையில் உள்ள சிறுத்தீவு பகுதியில் அமைந்திருந்த இராணுவ மற்றும் கடற்படை கூட்டுப்படை காவல் நிலை மீது விடுதலைப்புலிகளின் ஈரூடகப்படையினர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

சிறுத்தீவு, மண்டைதீவுக்கும் குருநகருக்கும் இடையில் அமைந்துள்ள சிறிய தீவாகும். அதற்கு அண்மையாக பூநகரியின் முனைப்பகுதி அமைந்துள்ளது. பூநகரியின் இந்த முனைப்பகுதியில் இருந்து 6 விசைப் படகுகளில் வந்த புலிகளின் ஈரூடகப்படையினர் அதிகாலை 1.30 மணியளவில் சிறுத்தீவில் அமைந்திருந்த படை நிலை மீது தாக்குதல் நடத்திய தாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

சுமார் 45 நிமிடங்கள் நீடித்த இந்த தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டதாகவும்,

**பெரும் தாக்குதல் ஒன்று ஆரம்பிக்கும்போது விடுதலைப்புலிகள் தமது இலகுகாலாட் படையினருடன் ஈருடகப் படையினரையும் பயன்படுத்தும் சாத்தியங்கள் அதிகரித்துள்ளன**

3 படையினரின் சடலங்களும், ராடர் சாதனங்கள், 12.7 மி.மீ கனரக இயந்திரத் துப்பாக்கி, 60 மி.மீ மோட்டார் உட்பட பெருமளவான ஆயுதங்களையும் வெடிபொருட் களையும் தாம் கைப்பற்றியுள்ள தாகவும் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களில் ஏறத்தாழ ஒரு டசின் நச்சுவாயு பாதுகாப்பு முகமூடிகள் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஏறத்தாழ 12 தொடக்கம் 18 பாதுகாப்பு தரப்பினர் இந்த சிறிய முகாமில் பணியாற்றுவது வழமை. யாழ்.குடாநாட்டின் தென்மேற்குபுற நுழைவாயிலில் சிறுத்தீவு அமைந்திருப்பதனால் விடுதலைப்புலிகள் கடல் வழியாகவோ அல்லது ஆகாயவழியாகவோ யாழ்.நகரப் பகுதிக்குள் ஊடுருவுவதை கண்காணிப்பதே இந்த முகாமின் பிரதான நோக்கம்.

முதலில் சிறிய காவலரணாக காணப்பட்ட இந்த காவல்நிலையின் பாதுகாப்புக்கள், கடந்த வருடம் மே மாதம் நெடுந்தீவில் அமைந்திருந்த கடற்படையினரின் முகாம் விடுதலைப்புலிகளின் ஈரூடகப்படையினரின் தாக்குதலுக்கு இலக்கானதை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டிருந்தது.

விடுதலைப்புலிகளின் நகர்வுகளை கண்காணிப்பதற்காக சிறிய ராடர் நிலை ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டதுடன், ஏறத்தாழ 2ஆயிரம் மீ தூரவீச்சுக் கொண்ட 50 கலிபர் துப்பாக்கி, இலகு காலாட்படையினர் பயன்படுத்தும் 60 மி.மீ மோட்டார் என்பனவற்றுடன் இரண்டு பிரிவுக்குரிய தளமாக இந்த தளம் மாற்றமடைந்தது (பிரிவு என்பது இராணுவத்தின் மிகச்சிறிய பிரிவு, இது 7 தொடக்கம் 8 படையினரை கொண்டிருப்பதுண்டு) பூநகரியின் கல்முனை புள்ளியில் உள்ள விடுதலைப்புலிகளின் பீரங்கி நிலையிடம் தொடர்பான தகவல்களை திரட்டும் மையமாகவும் இது தொழிற்பட்டு வந்தது.

அதிகாலையில் சமர் ஆரம்பித்ததும், சிறுத்தீவுக்கு அருகில் உள்ள மண்டைதீவு மற்றும் யாழ்.நகரப்பகுதியில் உள்ள இராணுவத்தளங்கள் உஷார்படுத்தப்பட்டன. 2007 ஆம் ஆண்டு நெடுந்தீவில் அமைந்திருந்த கடற்படையினரின் முகாமை விடுதலைப் புலிகள் தாக்கிய போதும், 51 ஆவது படையணியின் 2 ஆவது பிரிகேட்டை சேர்ந்த இரு பற்றாலியன்கள் தரையிறங்கிய புலிகளுக்கு எதிரான நடவடிக்கைக்கு தாயார்படுத்தப்பட்டிருந்தன.

ஆழம் குறைந்த யாழ்.கடல்நீரேரியில் நீருந்து விசைப்படகுகள் மற்றும் சாதாரண கண்ணாடி இழைப்படகுகளையே கடற்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதுண்டு. எனினும் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் குருநகருக்கு அண்டிய பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த கடற்படையினரின் 3 உட்கரையோர ரோந்து படகுகள் கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியதைத் தொடர்ந்து நீருந்து விசைப்படகுகள் மண்டைதீவு கடற்படைத் தளத்திலேயே நிறுத்தி வைக்கப்படுவதுண்டு.

விடுதலைப்புலிகளின் தாக்குதலின்போது மண்டைதீவு கடற்படைத்தளத்தில் இருந்து நீருந்து விசைப்படகுகள் எவையும் உதவிக்கும் வரவில்லை. தாக்குதல் ஆரம்பித்ததும் இந்த காவல்நிலையத்துடனான தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுவிட்டதாகவும், மேலதிக உதவிகள் அங்கு சென்றடையும் முன்னர் விடுதலைப்புலிகள் தாக்குதலை முடித்து கொண்டு வெளியேறிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் கடற்படைத் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், இரு கடற்படையினரும், ஒரு இராணுவச் சிப்பாயும் காணாமல் போயுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளை பொறுத்தவரையில் இந்த மாதத்தில் அவர்களின் ஈரூடகப் படையினர் நடத்திய இரண்டாவது கடல்தரை இணைந்த நடவடிக்கை இதுவாகும். கடந்த 5 ஆம் திகதி அதிகாலை மன்னார் நகரத்தின் கரையோரம் அமைந்திருந்த கொந்தைபிட்டி காவல்நிலையத்தின் மீதும் ஈரூடகப்படையினர் தாக்குதலை நடத்தியிருந்தனர்.


அதிகாலை 2.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த தாக்குதலில் மூன்று கடற்படையினர் கொல்லப்பட்டதுடன், ஒருவரது சடலமும், ஆயுத தளபாடங்களும் விடுதலைப்புலிகளின் சிறப்பு அணியினரால் கைப்பற்றப்பட்டிருந்தது. கொந்தைபிட்டி மற்றும் சிறுத்தீவு பகுதிகளில் நடைபெற்ற தாக்குதல்கள் படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறுத்தீவில் தாக்குதல் ஆரம்பமாகியதும், கடற்படையினரின் வடபிராந்திய கட்டளைப் பீடம் உஷார்படுத்தப்பட்டதுடன், தாக்குதல் நடைபெற்ற பகுதிகளை நோக்கி கடுமையான பீரங்கி தாக்குதல்களும் பலாலி தளத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் ஆயுதங்களையும், படையினரின் சடலங்களையும் விடுதலைப்புலிகள் எடுத்து சென்றது, அவர்களின் சிறப்பு படையணிகளின் நடவடிக்கைகளின் வேகம் தொடர்பான ஆச்சரியங்களை ஏற்படுத்தி உள்ளது.

**பூநகரிப் பகுதிக்கு மிக அருகில் அமைந்துள்ள இந்த தளத்தையும், மண்டை தீவு தளத்தையும் படையினர் பூநகரி கல்முனை பகுதி மீதான ஒரு அதிரடி நடவடிக்கைக்குத் தயார்படுத்தி வந்தனரா ?**

கடந்த ஆறு மாதங்களில் கடற்புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதுடன், கடற்படையினர் இழப்புக்களை சந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்த காலப் பகுதியில் 4 கடற்படை கலங்கள் மூழ்கடிக கப்பட்டதுடன், கடல்வழி தரையிறக்கம் மூலம இரண்டு தாக்குதல்களையும் விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ளனர். 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் மண்டைதீவு கடற்படை முகாம் மீதான ஈரூடகப்படையினரின் தாக்குதலை தொடர்ந்து, நெடுந்தீவு தரையிறக்கம், மன்னார் கரையோர தரையிறக்கம், சிறுத்தீவு தரையிறக்கம் என ஈரூட கப்படையினரின் தாக்கு தல்கள் அதிகரித்து செல் வது குறிப்பிடத்தக் கது.

அதிகமான நீரேரிகளையும், குடாக்கடல் களையும் கொண்ட பகுதி வடபோர்முனை யாகும். இந்த பிரதேசத்தில் ஈரூட கப்படையி னரின் தாக்கு தல்கள் முக்கியத்துவம் வாய்ந் தவை. இலங்கை கடற்படையினரும் ஈரூடக கொமோண்டோக்களை கொண்டுள்ளபோதும் அவர்களின் நடவடிக்கை கள் மட்டுப்படுத்தப் பட்டவை. 1996 ஆம் ஆண்டு சுண்டிக்குளம் பகுதியில் உள்ள பூனைத்தொடுவாயில் அமைந்திருந்த கடற்புலிகளின் ராடர் நிலையத்தை கைப்பற்ற அவர்கள் வான்படையினருடன் இணைந்து மேற் கொண்ட நடவடிக்கை தோல்வியில் முடிவ டைந்ததை தொடர்ந்து பெரும் நடவடிக்கை கள் எதனையும் அவர்கள் மேற்கொள்ள வில்லை.



## வேல்ஸிலிருந்து அருஷ்

எனினும் திருமலையின் திரியாய் காட்டுப்பகுதிகளை அண்டிய பகுதிகளில் திடீர் தரையிறக்கங்களை மேற்கொண்டு தேடுதல் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுவதுண்டு. மேலும் துறைமுகங்களையும், கடற்படையினரின் முக்கிய தளங்களையும் பாதுகாப்பதும் அவர்களின் பிரதான தொழில்.

ஆனால் விடுதலைப்புலிகளின் கடல் கொமோண்டோக்களின் நடவடிக்கை முற்றிலும் வேறுபட்டது. அவர்கள் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் தரையிறங்கி தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். எனினும் விடுதலைப்புலிகள் தமது ஈரூடகப்படையினரை தொடர்ச்சியாக தாக்குதல்களில் ஈடுபடுத்தி வருவது அவர்களின் பயிற்சி நடவடிக்கையின் ஓரங்கமாக கூட இருக்கலாம் என படைத்துறை அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதாவது பெரும் தாக்குதல் ஒன்று ஆரம்பிக்கும்போது விடுதலைப்புலிகள் தமது இலகுகாலாட் படையின்ருடன் ஈருடகப்படையிரையும் பயன்படுத்தும் சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. ஈரூடகப்படையினரை பொறுத்தவரையில் விரைவாக தரையிறங்கி எதிர்த்தரப்பு பாதுகாப்பு அரண்களை தாக்கி அழிப்பதன் மூலம் இலகுகாலாட்படையினரின் நகர்வை இலகுவாக்கும் தன்மை கொண்டவர்கள்.

இந்த நோக்கத்திற்காகவே உலகின் வலிமை மிக்க நாடுகள் ஈரூடகப்படையினரின் நடவடிக்கைகளில் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றன. இலங்கை இராணுவத்தின் 51 ஆவது படையணியின் தாக்குதல் எல்லையில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்தில் அமைந்திருந்த படை நிலை ஒன்று விரைவாக தாக்கி அழிக்கப் பட்டது. பல தரப்பிலும் பலத்த ஆச்சரியங்களை தோற்றுவித்துள்ளது.

இதனிடையே, குடிநீர் குழாய்களுடன கூடிய நச்சுவாயு தடுப்பு முகமூடிகளை இந்த தாக்குதலில் விடுதலைப்புலிகள் படையினரிடம் இருந்து கைப்பற்றி உள்ளதும், பல கேள்விகளை எழுப்பியுள்ளது. அதாவது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியான பூநகரி பகுதிக்கு மிக அருகில் அமைந்துள்ள இந்த தளத்தையும், மண்டைதீவு தளத்தையும் படையினர் பூநகரி கல்முனை பகுதி மீதான ஒரு அதிரடி நடவடிக்கைக்கு தயார்படுத்தி வந்தனரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

வடபோர்முனையின் கட்டளை தலைமையகமான பலாலி கூட்டுப்படை தளம் மீதான விடுதலைப்புலிகளின் பீரங்கி தாக்குதல்களை நிறுத்தும் நோக்கத்துடன், மயக்க வாயுக்களை அல்லது இரசாயன புகை குண்டுகளை செறிவாக பயன்படுத்தி பூநகரியின் கல்முனை மீது படையினர் தாக்குதல் நடத்த திட்டமிட்டு வருகின்றனரா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

சிறுத்தீவு கடற்படை காவல்தளம் மீதான கடற்புலிகளின் தாக்குதல், படைத்தரப்பின பாதுகாப்பு கட்டமைப்புக்களில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தலாம். அதாவது யாழ்.குடாநாட்டை சுற்றியுள்ள தீவுக்கூட்டங்கள் மற்றும் கரையோரப்பகுதிகளை பாதுகாப்பதற்கு பெருமளவான படையினரும், ஆயுதங்களும் அரசிற்கு தேவைப்படலாம் என்பது ஒருபுறமிருக்க, படையினரின் இரகசியத் திட்டங்களும் இந்த தாக்குதல் மூலம் அம்பலமாகி உள்ளதா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

### திருத்தம்

கடந்த வாரம் இடம்பெற்ற கட்டுரையில் பிரிகேடியர் பால்ராஜ் பூநகரி தவளை பாய்ச்சல் நடவடிக்கையில் காயமடைந்ததாக தவறுதலாக தெரிவிக்கப்பட்டுவிட்டது. அவர் யாழ்.தேவி நடவடிக்கைக்கான எதிர்சமரிலேயே காயமடைந்திருந்தார்.

பூநகரி படைத்தளம் மீதான படை நடைவடிக்கைக்கான பயிற்சியின்போது கடல் நடவடிக்கையை கேணல் சூசையும், தரை நடவடிக்கைகளை கேணல் சொர்ணம் மற்றும் பிரிகேடியர் பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தி வந்தனர்.

எனினும் யாழ்.தேவி நடவடிக்கையில் பால்ராஜ் காயமடைந்ததை தொடர்ந்து கேணல் சொர்ணம் தரைநடவடிக் கைகளை ஒருங்கிணைக்க, விடுதலைப்புலி களின் மூத்த தளபதி பொட்டு அம்மான் முழு நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்திருந் தார். கடந்த வாரம் இடம்பெற்ற தவறுக்கு வருந்துகின்றோம்.

# நுளம்புகளின் தொல்லை இல்லாதொழிய...

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**முட்டையிலிருந்து குடம்பி உருவாதலைத் தடுத்தல்**

இவற்றின் வாழ்க்கைச் சக்கரத்தின் ஆரம்பப்படியான முட்டை பெருக்கத்தையும் அவ்வாறே குடம்பிகள் உருவாக்கத்தையும் தடை செய்தால் நுளம்புகளை இலகுவாக அழிக்க முடியும்.

மலேரியா்வின் காலியாகிய அனோபிலிஸ் பெண் நிறையுடலி சுத்தமான சூரிய ஒளியுள்ள ஓய்வான நீரில் முட்டைகள் இடும். நீர்த்தாங்கிகளில் நீர் அதிக நாட்களுக்கு தேங்கி நிற்பின் இவற்றின் பெருக்கம் நடைபெறும்.

இதனைத் தடுக்க அடிக்கடி நீரை மாற்றி தொட்டிகளை சுத்தமாக்கி புதிய நீரை நிரப்புதல். சூரிய ஒளி படாதவாறு மூடிவிடல் போன்றன சிறந்த நடவடிக்கைகளாகும். மேலும் தோட்டங்களிலுள்ள கிணறுகள், பாடசாலைகள் பொது இடங்களிலுள்ள நீர்த்தடாகங்கள் என்பவற்றை அடிக்கடி சுத்தம் செய்து பராமரிக்க வேண்டும்.

டெங்கு காய்ச்சலை பரப்பும் ஈடிஸ் வகை நுளம்பானது வீட்டுச் சூழலிற் காணப்படும் சிறிய கொள்கலன்களிலுள்ள நீரில் முட்டையிடும். பொதுவாக சிறிய பாத்திரங்கள் , சிரட்டைகள் , இளநீர் கோம்பைகள், மீன்ரின்கள், உடைந்த போத்தல்கள், ரயர்கள் போன்ற வற்றில் மழைநீர் தேங்குவதால் அவற்றில் அவை முட்டைகள் இடுகின்றன.

எனவே இவற்றை மண்ணிற் புதைத்தல் , சிரட்டைகள் போன்றவற்றை எரித்தல், பழைய ரயர்களில் மண் நிரப்புதல் அவற்றின் துளைகளை ஏற்படுத்தி நீர் தேங்குவதை தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வீட்டு கூரைகளின் பீலிகளில் நீர் தேங்காதவாறு அவற்றுள் இருக்கும் குப்பைகளை அகற்றல், வீட்டினுள் வளர்க்கப்படும் பூச்சாடிகளிலுள்ள நீரை அடிக்கடி மாற்றுதல், மரங்களில் காணப்படும் நீர் தேங்கக் கூடிய பொந்துகளை மண் /தாரினால் அடைத்தல் போன்ற முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

கியூலெக்ஸ் நுளம்பானது யானைக்கால் நோய், மஞ்சட்காய்ச்சல் போன்ற நோய்களைப் பரப்புகின்றது. இவை அசுத்தமடைந்த நீர் தேங்கிநிற்கும் பெரிய குட்டைகளில் முட்டையிடுகின்றன. திறந்த பாதுகாப்பற்ற வடிகால்களில் நுளம்பு பெருகாதவாறு பராமரிக்க வேண்டும்.

கழிவுப் பொருட்கள் நீர் நிலைகளில் சேராதவாறு பொருத்தமான முறையில் சுத்திகரிக்கப்பட்டு கழிவுகளை அகற்றவேண்டும். பொதுவாக ஆடைக் கைத்தொழில், தும்புக் கைத்தொழில் போன்ற கைத்தொழில் தொழிற்சாலைகளை அண்டிய நீர் நிலைகளில் இவை அதிகம் பெருகுகின்றன. எனவே இந் நீர்த் தடாகங்களை பொருத்தமான முறையில் பராமரிக்கவேண்டும்.

**குடம்பிகளின் தொடர்ச்சியைத் தடுத்தல்**

நீர்த்தடாகங்களில் நுளம்புக்குடம்பிகளை உண்ணக்கூடிய, திலாப்பியா, கப்பிஸ், கட்டி பச்சான் போன்ற மீனினங்களை வளர்த்தல் சிறந்த உயிரியற் கட்டுப்பாட்டு முறையாகும்.

இதுதவிர தும்பிகளின் அணங்கு போன்றனவும் நுளம்புக் குடம்பிகளை வினைத்திறனாக அழிக்கின்றன. இந் நடைமுறைகளை நாம் பின்பற்றாவிடின் முட்டைகளிலிருந்து குடம்பிகள் உருவாகி அவை நிறையுடலி நுளம்புகளாக எமது வாழ்க்கை வட்டத்தைத் தொடரும். நுளம்பின் வாழ்க்கை சரிதத்தில் அவற்றின் முட்டை, குடம்பி பருவங்களை அழிப்பதே சூழலை பதிக்காததும், நீர்வாழ் உயிரிகள், நீருக்கு தீங்கேற்படுத்தாததும் செலவு குறைந்ததுமான முறையாகும்.

மலேரியாவை பரப்பும் அனோபிலிஸ் வகை நுளம்புகள் பொதுவாக வீட்டின் உட்புறத்திற் காணப்படுவதால் இவற்றை அழிக்க Pyrethroids எனப்படும். வீட்டினுள் விசிறப்படும். பூச்சி கொல்லிகளைப் பயன்படுத்தலாம்.

டெங்கு,சிக்கின்குனியாவை பரப்பும் ஈடிஸ் இன நுளம்புகள் பொதுவாக வீட்டின் வெளிப்புறங்களில் காணப்படுகின்றன. Technical molathion எனப்படும் இரசாயனப் பதார்த்தத்தை நுளம்புகள் மறைந்து செறிவாக வாழும் பிரதேசங்களில் தகுந்த இயந்திரத்தால் விசிறி இவற்றை அழிக்கமுடியும்.

எனினும் இப்பூச்சி நாசினிகளின் அதிகரித்த பாவனையானது சிறுவர், முதியோர் , கர்ப்பிணித்தாய்மார், ஆஸ்துமா போன்ற ஒவ்வாமை நோயுடையோர் , சுவாச நோயாளிகள் போன்றோரில் சில பாதக விளைவுகளை ஏற்படுத்தும்.

இதன் விளைவாக ஆஸ்துமா நோயாளிகளில் நோயின் வீரியம் அதிகரித்தல், அருவருப்புத்தன்மை, வாந்தி, தலைச்சுற்று, சருமநோய்கள், தலைவலி போன்ற விளைவுகள் ஏற்படும். இக் கிருமி நாசினிகளின் மிதமிஞ்சிய பாவனை குழந்தைகளில் பிறப்புரிமைக் குறைபாடுகளை ஏற்படுத்தும் எனவே இவற்றின் பாவனையை முடிந்தளவு குறைக் வேண்டும்.தொடர்ச்சியான இவற்றின் பாவனை நுளம்புகளில் எதிர்குல வகைகளின் தோற்றத்திற்கு ஏதுவாகும்.

மேற்கண்டவாறு நிறையுடலி நுளம்புகளை அழிக்க தவறின் அவை நோய்க் காவிகளாக மாறி ஒரு நோயாளி அல்லது சுகதேகியை கடித்தபின் இன்னொரு சுகதேகியை தாக்குவதைத் தடுக்க பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மலேரியாக் காவி நுளம்புகள் மாலை 6-11 மணி வரை, அதிகாலை 3-7 மணி வரையான நேரங்களிலேயே மனிதனை கடிக்கின்றன. இவ்வாறே டெங்கு, சிக்குன்குனியா நோய்களின் காவி நுளம்புகள் பகல் 7-10 மணி வரை, மாலை 3-6 மணிவரையான நேரங்களிலும் யானைக்கால் நோயைப் பரப்பும் நுளம்புகள் இரவு 10மணி தொடக்கம் அதிகாலை 2-3 மணி வரையான நேரத்திலேயே மனிதனை தாக்குகின்றது. எனவே மேற்கண்ட நேரங்களிலே நாம் அதிக கவனத்துடன செயற்பட்டால் இந் நோய்களின் தாக்கத்தை தவிர்க்க முடியும்.

வீட்டின் சுற்றுப்புறத்தை சுத்தஞ் செய்து வீட்டு யன்னல்களை நுளம்புகள் புகாதவாறு இறுக்கமான வலைகளால் அடைத்தல், காலை மாலை நேரங்களில் யன்னல்களை மூடுதல் போன்ற செயற்பாடுகளால் நுளம்புகள் வீட்டினுட் புகுதலை தடுக்கலாம்.

மேலும் மலேரியா போன்ற நோய்த் தாக்கமுள்ள பிரதேசத்து தாய்மார், சிறுவர்கள் பாதுகாப்பான பிரதேசங்களுக்கு செல்லுதல் நன்று. நுளம்புகளின் தாக்கத்தை தவிர்க்க மெல்லிய நிற, முழுநீள, இறுக்கமாக நெய்த ஆடைகளை மாலை, இரவு வேலைகளில் அணிதல், சித்திரனெல்லா எண்ணெய், போன்ற நுளம்பு விரட்டி பதார்த்தங்களை பூசுதல் போன்ற நடைமுறைகளை பின்பற்றலாம்.

நுளம்பு விரட்டி மருந்துகள் குறைவான செறிவிலேயே பூசப்படுத்தல் வேண்டும். மேலும் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார், ஒவ்வாமை மற்றும் தோல் நோயுடயோர் இவற்றை பூசுவதை தவர்த்தல் நன்று. இம் மருந்துகளை பூசி 6 மணி நேரத்திற்கு மேல் உடலில் இருப்பதை தவிர்த்து பூசிய இடங்களை நன்றாகக் கழுவி சுத்தம் செய்ய வேண்டும். மேலும் கண்,வாய், கோலிலுள்ள காயங்கள் என்பவற்றுடன் இவற்றின் தொடுகையை தவிர்க்க வேண்டும். ஆபத்தான பக்கவிளைவுகள் ஏற்படின் பூசிய மருந்துடன் வைத்தியரை உடன் நாடவேண்டும்.

இரவில் உறங்கும் வேளையில் நுளம்பின் தாக்கத்தை தவிர்க்க நுளம்பு வலைகளை சிறப்பாக நுளம்பு எதிர் மருந்துகளை கொண்ட நுளம்பு வலைகளை உபயோகித்தல் விரும்பத்தக்கது.

இன்றைய சமூகத்தில் நுளம்புத் திரிகளின் பாவனை அதிகளவிற் காணப்படுகின்றது.

இவை இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியனவாகவும் ஒப்பீட்டளவில் மலிவானவையாகவும் இருப்பதால் இதனை மக்கள் அதிகம் விரும்புகின்றனர். ஆனால் இவை ஒவ்வான்மைத் தன்மையுடையோரில் தும்மல். தலைவலி என்பவற்றையும் ஆஸ்துமா நோயாளிகளில் நோயின் வீரியத்தையும் அதிகரிக்கின்றன. வீட்டினுள்ளே நுளம்புகளின் தாக்கத்திலிருந்து தப்பிக்க Mosquto bats/Rackets எனப்படும் நவீன கருவிகள் பயன்படுகின்றன. இவற்றி னால் குறிப்பிட்ட ஓர் பிரதேசத்திற் காணப்படும் அனைத்து நுளம்புகளையும் மின்சாரப் பாய்ச்சலினால் சுட்டெரிக்க முடியும்.

Garlic pills, Vit $B_2$ போன்ற மாத்திரைகள் உள்ளெடுப்போரின் வியர்வையில் இக் கூறுகள் காணப்படுவதால் அவை நுளம்புகள் குற்றுவதைத் தடுக்கின்றன.

இம்முறைகளையும் தாண்டி நுளம்புகள் ஓர் சுகதேகியைத் தாக்கும் சமயத்தில் நோய ஏற்படாது. தடுக்க சில நடவடிக்கைகளை மேற் கொள்ள முடியும். உதாரணமாக மலேரியா நோய்க்காவி நுளம்புகள் காணப்படும் பிரதேசத்திற்கு பிரயாணம் செய்யுமுன் 1-2 வாரங் களும் அங்கு தங்கியுள்ள போதும் அப் பிரதேசத்திலிருந்து திரும்பிய பின் 4 வாரங் களும் குளோரோகுயின், மெப்ளோகுயின் போன்ற மருந்துகளை வைத்திய ஆலோசனையுடன் உபயோகிக்க வேண்டும்.

இதுபோல யானைக்கால் நோய் ஏற்படுவதைத் தடுக்க DEC என்னும் மருந்தையும் யப்பானிய மூளைக்காய்ச்சலை தவிர்க்க 1-2 வயதிற்குரிய குழந்தைகளுக்கு தடுப்பூசியும் வழங்க வேண்டும்.

இவற்றையும் மீறி நோய் நிலமை ஏற்படின் அந் நோயாளி மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டும். அந் நோயாளியை நுளம்பு தாக்காதும் அவ்வாறு தாக்கிய நுளம்பு ஏனையோரை கடிக்காதவாறும் பாதுகாப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

எனவே நுளம்புகளின் ஒவ்வொரு வாழ்க்கைச் சரித படிகளையும் தனித்தனியோ தகாக்கும் போதே அவற்றை கட்டுப்படுத்த முடியும். இச் செயன்முறைகள் யாவற்றையும் ஒருங்கிணைந்த ஒரே சமயத்தில் பிரயோகிக்கும் செயன்முறையே ஒருங்கிணைந்த காவி ஒழிப்புத் திட்டம் (Intergrated vector control programme) எனப்படும்.இதுவே மிகச் சிறந்த நுளம்புகளை முற்றாக அழிக்கின்ற செயற்பாடாகும்.

எனவே இதுநாள் வரையும் அறியாமை எனும் இருளினால் மூழ்கி நுளம்புகளுக்கு இரையாகி எம் சமுதாயத்தையே நோய்களின் பிடிக்குள்ளே ஆளாக்கிய நாம் இனியாவது விழித்தெழுந்து எம் நிலையுணர்ந்து ஆரோக்கியமாக சமூகத்தை கட்டியெழுப்ப முற்படுவோம். (முற்றும்)

---

**உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

*'நுளம்புடன் ஒரு குருஷேத்திரம்'*

இறுவெட்டு வெளியீடு

இடம் :-கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்
காலம் :- 01.06.2008 காலை 9.30 மணி.

பிரதம விருந்தினர் உயர்திரு கே.கணேஷ்(அரச அதிபர் -யாழ்.மாவட்டம்)
பிரவேசம் இலவசம்:
'நுளம்பால் பரவும் நோய்கள் பற்றியும் நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் சுருக்கமாக எடுத்தியம்பும் ஒரு விபரணச் சித்திரம்' (ஆங்கில உப தலைப்புக்களுடன்)

---

## 60 ஆவது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி , கலாமன்ற சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் பா. பாலகணேஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனனும் , சிறப்பு விருந் தினர்களாக யாழ்.செயலக புனர்வாழ்வுத் திட்டப் பணிப்பாளர் எம்.பிரதீபன் , யாழ்.பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி பதிமதி வசந்தகுமார் , நல்லூர் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் ஆகியோரும் கழக தமிழ்த் துறைப் பேராசிரியர் எஸ்.சிவ லிங்கராஜா , நல்லூர் ப.நோ. கூ.சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி , திருநெல்வேலி ஜே/114 கிராம அலுவலர் சோதி சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் "பிள்ளைகளின் ஒழுக்க விழுமியங்களை உருவாக்குவது வீட்டுச் சூழல்- பாடசாலைச் சூழல் " எனும் தலைப்பில் பட்டிமன்றமும் திருநெல்வேலி சைவ சிறுவர் இல்ல மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. (ஓ-7)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(சங்கானை)

சங்கானை மேற்கு , தெற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 07 ஆம் திகதி சனிக்கிழமை சம்மேளனத்தின் தலைவர் ந. இராசா தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு நிற்சாமம் ஞான வைரவர் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் தொல்புரம் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி கு. சாவித்திரிதேவி, சங்கானை மேற்கு கிராம அலுவலர் ந. மகிழ்ராஜ் மற்றும் சங்கானை தெற்கு கிராம அலுவலர் ந. சர்வானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். மேற்படி கூட்டத்தில் புதிய வருடத்துக்கான நிர்வாக சபை அங்கத்தவர் தெரிவு நடைபெறவுள்ளதால் விவசாய சம்மேளனத்தின் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு சம்மேளன செயலாளர் வே. சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ-15)

## வீதி திருத்தம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை நாரந்தனை (சென் பீற்றர்ஸ்) வீதி சம்பேதுருவானவர் வீதி கொங்கிரீட் கல் சீமெந்து போடப்பட்டு திருத்தியமைக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

## தமிழ் தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டத்தில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டி பிரிவு ஐந்தில் இலக்கண வினாவிடைப் போட்டியில் யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி கு.யஸ்மினி கிறிஸ்ரெலா முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ஓ)

## கணனிப் பரீட்சை

(சங்கானை)

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையினால்சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் நடத்தப்பட்ட 2007 ஆண்டு 2ஆம் அரை ஆண்டு மாணவர்களுக்கான கணனிப் பரீட்சைகள் நாளை திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கணனி நிலையத்தில் நடைபெறும் என இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யின் நிகழ்ச்சித் திட் உதவியாளர் ஆர். கிருஷ்ணதாஸ் தெரிவித்துள்ளார். (ஓ-15)

## மஹோற்சவம்

(பருத்தித்துறை)

. பொலிகண்டி கந்தவனம் திருவருள்மிகு கல்யாண வேலவ சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் 4 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 11ஆம் திகதி புதன்கிழமை பி.ப2 மணிக்கு வேட்டைத் திருவிழா வும், 16ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறமும், 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10.30 மணிக்கு இரதோற்சவமும், 18ஆம் திகதி புதன் கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவமும், மாலை4 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.(ஓ-6)

◆◆◆

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை அருள்மிகு ஆதி வைரவர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி தினமும் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பகல் சாந்தி வழிபாட்டுடன் வீதி உலாவும் நடைபெற்று நிறைவு பெறும். (ஓ-72)

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மீதான குற்றச்சாட்டுக்கள்

## அடிப்படையற்றவை; ஆணைக்குழு விளக்கம்

(கொழும்பு)

முக்கிய மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் அதன் செயற்பாடுகளை மேலும் தாமதப்படுத்துவதுடன் அதன் மூலம் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் அவப்பெயரை ஏற்படுத்துமென விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவி பெற்றுக் கொள்வதாகவும், ஆணைக்குழுவில் அங்கம் வகிப்பவர்கள் அந்தப் பதவிகளுக்குப் பொருத்தமற்றவர்கள் எனவும் குற்றஞ்சாட்டி சிரேஷ்ட சட்டத்தரணிகளான எஸ்.எல். குணசேகர மற்றும் கொமின் தயாசிறி ஆகியோர் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்ததுடன் இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆணைக்குழு விளக்கமளிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் ஜனாதிபதி செலயகத்திற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதுடன், முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படை அற்றவை எனவும் அதில் தெரிவித்துள்ளது.

விசாரணை ஆணைக்குழு அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொண்டதாக ஊடகங்களில்வெளியான தகவல்களை மறுத்திருக்கும் அந்த ஆணைக்குழு 17 அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்களின் படுகொலைகள் மற்றும் திருகோணமலையில்கொல்லப்பட்ட 5 இளைஞர்களின் படுகொலைகள் குறித்த விசாரணைகளை மேற்கொள்வதற்கான தொலைக்காட்சி மூலமான நேரடி சாட்சியமளிப்புக்கு உதவிகள் தேவையா என மூன்று நாடுகளையும் சேர்ந்த தூதுவர்கள் விசாரணை ஆணைக்குழுவிடம் கோரியிருந்ததாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாத இறுதியில் சர்வதேச சுயாதீன மாண்புமிக்கோர் குழு வெளியேறியதைத் தொடர்ந்து சாட்சியங்கள் பதிவு செய்வதைத் தவிர வேறு மாற்றுவழி எமக்கு இருக்கவில்லை.

இதனால் அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன வழங்க முன்வந்த உதவிகளை மறுப்பதற்கு காரணங்கள் இருக்கவில்லை என ஆணைக்குழு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தின் செலவில் இரண்டு ஆணைக்குழு அதிகாரிகள் சாட்சியங்களை பாதுகாப்பது தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதற்கு அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

ஆணைக்குழு பயன்படுத்தும் சாதனங்கள் ஜப்பான் அரசாங்கத்தினால் நீதியமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியுதவியால் வழங்கப்பட்டவை என ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் பதில் கடிதங்கள் மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க, சட்டமா அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோகன்ன ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ந-5)

# புலிகள் கொன்றதாக மரணச் சான்றிதழ் 20 வருடம் உயிர் வாழும் ஆசாமி

(சிங்கப்பூர்)

தான் இறந்துவிட்டதாக பொய் மரண சான்றுகளை சமர்ப்பித்து சிங்கப்பூர் அரசாங்கத்தை ஏமாற்றிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் ஒருவரை சிங்கப்பூர் நீதிமன்றம் குற்றவாளியாக கண்டுள்ளது.

60 வயதான இவர் கடந்த 20 வருடங்களாக இலங்கையில் வாழ்ந்து வந்த அதேவேளை உறவினர்கள் ஆயுள்காப்புறுதியை சிங்கப்பூரில் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டதாக மரணச்சான்றிதழைப் பெற்ற இவரது குடும்பம் 3 இலட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை நட்டஈடாகப் பெற்றிருந்தது.

குறிப்பிட்ட இலங்கையர் வழங்கிய வாக்கு மூலத்தில் தனது உறவினர்களின் உதவியுடன் இரண்டு காப்புறுதி நிறுவனங்களை முன்னர் ஏமாற்றி சுமார் 3 இலட்சம் அமெரிக்க டொலர்களை 1989ஆண்டு பெற்றதனையும் ஒப்புக் கொண்டுள்ளார். (ந-5)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிதியுதவி நாளை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய், சாவகச்சேரி, நல்லூர் பிரதேச செயலர்களுடன் இணைந்து அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 110 பயனாளிகளில், முதல் கட்டமாக தொழில் திட்டமிடல் பயிற்சி நெறியினை நிறைவு செய்த 39 பேருக்கு தொழில் ஆரம்பிப்பதற்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு நாளைய தினம் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனகேட்போர்கூடத்தில்இடம்பெறும்.

பேராசிரியர் ப.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிறிஸ்தவ நிதியத்தின் அவசர கால நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் திருமதி தர்சினி மகேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், சாவகச்சேரி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ந-5)

# தீவக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

தீவக வலய பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் கற்றல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வேலணை பிரதேசத்தில் 5 பாடசாலைகளில் கற்றல் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதேவேளை ஊர்காவற்றுறை பிரதேசத்தில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் கற்றல் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தீவகத்தில் உள்ள அனைத்து இடங்களிற்கும் கற்றல் சாதனங்கள் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-14)

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
வாடிக்கையாளரின் நலன்கருதி லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:- நீங்கள் அனுப்பப்படும் பொதிகளிற்கு காப்புறுதி உண்டு.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

# மியன்மார் புயலில் பலியானவர்களில் நாற்பது ஆயிரம் பேர் தமிழர்கள்

## உதவி வழங்குமாறு தமிழக முதல்வரிடம் கோரிக்கை

(சென்னை)

மியன்மார் நாட்டைத் தாக்கிய நர்கீஸ் புயலுக்குப் பலியான 2 இலட்சம் மக்களில் சுமார் 40 ஆயிரம்பேர் தமிழர்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது. இது தவிர சுமார் ஒரு இலட்சம் தமிழர்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

இது தொடர்பில் தமிழக விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

நர்கீஸ் தாக்கியதைத் தொடர்ந்து மியன்மாரில் உள்ள இராணுவ அரசாங்கம் வெளிநாடுகளின் உதவிகளை வேண்டாமென்று மறுத்துவந்தது.

ஐ.நா சபையின் வலியுறுத்தலுக்குப் பின்னரே தற்போது உதவிகள் அனுமதிக்கப்படுகின்றன.

அந்த உதவிகளும் கூட பர்மியர்களுக்கே வழங்கப்படுகின்றன. அங்கு வாழும் சிறுபான்மைத் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

மியன்மாரில் ஐராவதி டெல்டா பகுதியில் பகோ மாகாணமும் யங்கூனைச் சுற்றியுள்ள பகுதிகளும் தான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதிகள் யாவும் தமிழர்கள் நிறைந்து வாழும் பகுதிகளாகும்.

தமிழர்களின் கிராமங்களான தங்கிதிங்காஜுன், டவுன்ட் கோன் முதலியவை முற்றாக அழிந்து விட்டதாக தெரியவந்துள்ளது.

மியன்மாரில் தற்போது சுமார் 15 இலட்சம் தமிழர்கள் உள்ளனர்.

மியன் மாரில் வசிக்கும் தமிழர்கள் உரிய உதவிகள் கிடைக்காவிட்டால் மேலும் உயிரிழப்புக்களை சந்திக்கும் அவல நிலையில் உள்ளனர். என்ற தகவல்களைத் தன்னுடைய கடிதத்தில் தெரிவித்துள்ள விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் தமிழக அரசின் சார்பில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நிவாரண உதவிகளை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-5)

60 நாட்களில் தபால் மூல ஆங்கில பாடநெறி
இலகுவாக ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி
English Language யின் தபால் மூல ஆங்கில பாடநெறிகள்.
BASIC/SPOKEN ENGLISH & DIPLOMA IN ENGLISH
அடிப்படையில் இருந்த தமிழ் விளக்கத்துடன் கற்றுக் கொடுக்கப்படும் தமிழ் எழுத வாசிக்க தெரிந்து இருந்தால் போதுமானது.
60 நாட்களில் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் ஒன்றும்
FREE FREE இலவசம் இலவசம் பாடநெறியில் இணையும் அனைவருக்கும்
* இலவச 30 days Easy Way English Book Part1
Easy Way English
இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எம்முடன் இணைய முடியும்
பாடநெறியில் இணைய வயது கட்டுபாடோ, ஆங்கில முன் அறிவோ தேவையில்லை, பாடசாலை மாணவர்கள், தொழில் புரிவோர், தொழில் வாய்ப்பு எதிர்பார்க்கும், இல்லத்தரசிகள் என யாவருக்கும் இணைய முடியும்.
மேலதிக விபரங்களுக்கு 10/- பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.
THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. BOX 83, KANDY. Tel: 081-5615561, 0777-220002

# முதலமைச்சர்கள் ஒன்றியத்தின் தலைவராக பிள்ளையான்

(கொழும்பு)

மாகாண முதலமைச்சர்கள் ஒன்றியத்தின் புதிய தலைவராக கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அடுத்த நான்கு மாதங்களுக்கு அவரே தலைவராக பதவிவகிக்கவுள்ளார். நேற்றுப் பதுளையில் இடம்பெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலேயே முதலமைச்சர்கள் ஒன்றியத்தின் தலைவராக பிள்ளையான் நியமிக்கப்பட்டுள்ளார். அடுத்த முதலமைச்சர்கள் மாநாடு மட்டக்களப்பில் நடாத்துவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.



இலங்கையில் மாகாண சபை முறைமை இன்னமும் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என தெரிவித்திருக்கும் முதலமைச்சர் பிள்ளையான் மத்திய அரசாங்கத்திடம் மாத்திரம் குவிந்து காணப்படும் பெருமளவிலான அதிகாரங்கள் மாகாண ரீதியில் பகிர்ந்தளிக்கப்படவேண்டுமென தெரிவித்தார். (ந-5)

# மூதூர் கடற்றொழிலாளர்கள் மீதான தடை ஓர் அரசியல் பழி வாங்கல் சம்பவமா?

## ‘த மோர்ணிங் லீடர்’

(கொழும்பு)

திருகோணமலை மூதூர் கடற்தொழிலாளர்கள் மீதான மீன் பிடித்தடையானது மஹிந்தவின் ஒரு அரசியல் பழிவாங்கலா என்று கொழும்பில் இருந்து வெளியாகும், ‘த மோர்ணிங் லீடர்’ ஒரு வாரஏடு கேள்வி எழுப்பியுள்ளது.

மூதூர்ப் பகுதியில் காலை உணவை உட்கொள்ளாத சில பாடசாலை மாணவ மாணவிகள் மயக்கமடைந்தனர். கிழக்கு வாழ் முஸ்லிம்கள் பிரச்சினைக்கு மேல் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். மூதூரில் மீன் பிடித்தடை நடை முறைப் படுத்தப்பட்டுள்ளது. மூவாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் மீன் பிடி தொழிலை நம்பியே தமது வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். உண்மையிலேயே பாதுகாப்பு காரணங்களுக்காகவா அல்லது வேறு அரசியல் பழிவாங்கல்களின் காரணமாகவா இந்த மீன் பிடித் தடை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. என்பதை விளக்கிக்கொள்ள முடியாது.

மக்கள் குழப்பமடைந்துள்ளனர். மீன்பிடித் தடை உத்தரவினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்க பல குழுக்கள் முயற்சிகளை மேற் கொண்டு வருகின்றனர். குறைந்த பட்சம் கஞ்சி ஒன்றை யேனும் காலை நேரத்தில் வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மீன் பிடித் தொழிலைத் தவிர வேறு தொழிலில் ஈடுபட வாய்ப்புக்கள் உண்டா? என்பது மூதூர் மீனவர்களை பொறுத்தவரையில் கேள்விக் குறியாகவே அமைந்துள்ளது.

மூதூர் மீனவர்களுக்கு உலகின் அனைத்துப்பாகங்களிலிருந்தும் அனுதாப அலை திரண்டு வந்த வண்ணம் உள்ளது. கிழக்கு வாழ் மக்கள் இயற்கைப்பேரழிவு மற்றும் மனிதனால் மேற்கொள்ளப்பட்ட அழிவு என்பவற்றினால் சொல்லொனாத் துயரங்களை கடந்த காலங்களில் அனுபவித்துள்ளனர். முஸ்லிம் மீனவர்கள் இரண்டு கிலோ மீற்றர்களுக்கு மட்டுமே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ள அதேநேரத்தில் சிங்கள மீனவர்களுக்கு அவ்வாறான எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. திருகோணமலையில் நூற்றாண்டுகளாக மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டுவரும் முஸ்லிம்களுக்கு இனரீதியான தடைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு முஸ்லிம்கள் பயங்கரவாதத்திற்கு ஆதரவாகவோ அல்லது அரசாங்கத்திற்கு எதிராகவோ செயற்பட்டுள்ளனரா என்ற கேள்விக்கு எந்தவித பதிலும் இல்லை என்றே குறிப்பிடலாம் . கடந்த 10ஆம் திகதி திருகோணமலையில் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதைத்தொடர்ந்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததாகவும் மீன் பிடித்தலுக்கான தடை தற்பொழுது தளர்த்தப்பட்டதாகவும் கடற்படை பேச்சாளர் ‘சண்டே லீடர்’ பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த 20 மற்றும் 21ஆம் திகதியில் மீன் பிடித்தொழிலுக்கு அனுமதிக்கப்பட்டபோதிலும் அதன் பின்னர் அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். பருவ கால மாற்றம் காரணமாக மீன் பிடித் தொழிலுக்கு உசிதமான காலங்களில் மீன் பிடியில் ஈடுபட்டால் மட்டுமே பயனடையமுடியும் என மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். போஷாக்கு குறைபாடு காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்கள்மயக்கமடைந்துள்ளனர் எனி னும் இது தொடர்பிலான எந்தவொரு முறைப்பாடும் தமக்கு கிடைக்க வில்லை என மூதூர் பிரதேச சபையின் தலைவர் ரஜீஸ் தெரிவித்துள்ளார் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மூதூரில் வசிக்கும் அப்பாவி மீனவர்களின் ஒரே வாழ்வு ஆதா ரமாக மீன் பிடித்தொழில் காணப்படுகின்றது. இந்தத் தொழிலின் மூலமே தமது அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றிக் கொள்கின்றனர்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு நாடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நாடுகளை மேற்குலகம் சோசலிச நாடுகளாகவே கருதுகின்றனர். எனினும் தற்போது ஜனநாயகம் என்பது ஊடகவியலாளர்களின் உடல்களை பதம் பார்க்கப்படும் பயன்படும் ஓர் கூரிய ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகின்றது எனக் கூறின் அது பிழையாகாது. உண்மையில் சோசலிசக்கொள்கை என்பது ஆட்சியாளனும் பொதுமகனும் ஒன்றே என்பதாகும்.

எனினும் ஆட்சியாளர்கள் செல்வதற்காக பல மணி நேரம் கடும் வெய்யிலிலும் கடும் மழையிலும் குடிமக்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஒன்றே தோன்றியுள்ளது. பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 157 ரூபாவாகவும் . டீசல் ஒரு லீற்றரின் விலை 110 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. சோசலிச நாடுகளின் உழைக்கும் வர்த்தகத்தினருக்கு உரிய வகையில் பொருட்கள் சேவைகள் விநியோகிக்கப்பட வேண்டியது இன்றையமையாத ஒன்றாக காணப்படுகின்றது. இதனையே ‘மாகாகவி பாரதி தனியொருவனுக்கு உணவில்லை எனின் ஜகத்தினை அழித்திடுவோம்’ என தனது கவிதையில் அக்கினி பறக்கத் தெரிவித்திருந்தார்.

நாட்டில் எவரும் வெறும் வயிற்றுடன் உறங்காமல் இருக்காதவாறு பார்த்துக்கொள்வதே ஆட்சி அதிகாரத்தில் தலயாய கடமையாகும்.

இதனாலேயே அரசாங்கம் மூதூர் மீனவர்களுக்கு உணவு நிவாரணங்களை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. இந்த மீன் பிடி தடை ஓர் அரசியல் பழி வாங்கல் சம்பவமா என்று எண்ணத் தோன் றுகின்றது. அது உண்மையாக இருந்தால் ஜன நாயக நாட்டில் தமக்கு விரும்பிய ஓர் வேட்பாளனுக்கு வாக்களிக்கக்கூடிய உரிமை மறுக் கப்பட்டுள்ளது. அல்லது அவ்வாறு சுதந்திர மாக வாக்களிப்பதனால் பாரிய பின் விளைவு களை அப்பாவி வாக்காளர்கள் சந்திக்க வேண் டிய பாதகமான அரசியல் பின்னணி ஒன்று உரு வாகியுள்ளது. இதனை அதிகார துஷ்பிரயோ கம் என்று சொல்வதனை விட வேறு எவ்வாறு குறிப்பிட முடியும்.

மூதூர் பிரதேச மீனவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை ஓர் அரசியல் பழிவாங்கலாக இருந்தால் தனது விரல்களாலே கண்களை குத்துவதற்கு நிகரான செயலாகும். மீன் பிடி தடைக்கு எதிராக மூதூர் மீனவர்கள் கடந்த திங்கட் கிழமை முழு அடைப்பில் ஈடு பட்டனர். சுமார் 2 ஆயிரம் மீனவர்கள் இந்த முழு அடைப்பில் கலந்து கெண்டனர். தமது வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் மூதூர் மீனவர்கள் சொல்லொனாத் துன்பங்களை எதிர்நோக்க நேரிடும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை எனவே இந்தப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வுகள் பெற் றுக்கொடுக்கப்படவேண்டும். (ஓ-5)

# கிளிநொச்சியில் உணவு பற்றாக்குறை அறிவித்தல் கிடைக்கவில்லை என்கிறது அரசு

(கொழும்பு)

உணவுப்பொருள் தட்டுப்பாட்டால் கிளிநொச்சியில் இடம்பெயர்ந்த மக்கள் போதிய உணவின்றி பாதிக்கப்பட்டிருப்பதாக கிளிநொச்சி மாவட்ட செயலாளர் இராசலிங்கம் வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

உணவுப்பொருட்கள் உட்பட ஏனைய பொருட்களின் விநியோகம் 80 வீதமாக குறைக்கப்பட்டிருப்பதால் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு போதிய அளவு உணவுப் பொருட்களை வழங்கமுடியாதுள்ளது என மாவட்ட செயலாளர் பி.பி.சி.செய்திச்சேவைக்கு கூறினார்.

உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றபோது கிளிநொச்சியில் இடம்பெயர்ந்துள்ள மக்களில் 12ஆயிரம் பேருக்கு உலக உணவுத்திட்டத்தின் ஊடாகவும் ஏனைய 17 ஆயிரம் பேருக்கு இலங்கை அரசாங்கத்தின் புனர்வாழ்வு திட்டத்தின் கீழும் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டன என்றார் அவர்.

அரசாங்கம் மற்றும் பாதுகாப்புப் படையினரால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரணமாக உணவுப்பொருள் விநியோகத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கட்டுப்பாடுகள் விதிக்கப்பட முன்னர் கிளிநொச்சிக்கு 200-300 லொறிகளில் பொருட்கள் எடுத்துவரப்பட்டன.

எனினும் தற்பொழுது 50 லொறிகள் மாத்திரமே வருகின்றன என குறிப்பிட்டுள்ளார் அவர்.

உணவுப்பொருட்களை விநியோகிப்ப தற்கு கூட்டுறவுச்சங்கங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளன. எனினும் அவ்வாறு வழங்கப்படும் நிவாரணங்கள் மக்களுக்குப் போதுமானதாக இல்லை. நிவாரணப் பொருட்களை ஒரு வாரத்திற்கே மக்கள் பயன்படுத்தி பழக்கப்பட்டவர்கள் எனினும் தற்பொழுது அவர்கள் ஒரு மாதத்துக்கு பயன்படுத்த வேண்டியுள்ளது என்றார்.

உணவுப்பொருட்களை எடுத்துச்செல்வற்கான கட்டுப்பாடுகளை நீக்குமாறு மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் விடுத்த வேண்டுகோளுக்கு அரசாங்கத்திடமிருந்து இதுவரை எந்தப்பதிலும் வழங்கப்படவில்லை எனவும் பி.பி.சி செய்திச்சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

எனினும் கிளிநொச்சியில் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக எந்தவொரு அறிக்கையும் தாம் பெற்றுக்கொள்ளவில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித் துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முற்றாக தவறானவை என மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் ரிசாட் பதியூதீன் பி.பி.சி. செய்திச்சேவையிடம் கூறியுள்ளார்.

உணவுப்பற்றாக்குறை தொடர்பாக மாவட்ட செயலாளர் எமக்கு இன்னமும் அறிவிக்கவில்லை. தேவைப்பட்டால் தேவையான அளவு உணவுப்பொருட்களை அரசாங்கம் அனுப்பி வைக்கும் என்றார் அமைச்சர். (ஓ-5)

# சினைப்பையில் வளர்ந்த சிசு உயிருடன் மருத்துவ உலகிலேயே அதிசய சம்பவம்

## என்கிறார் டாக்டர் அன்ட்ரூ மில்லர்

(மெல்போர்ன்)

அவுஸ்திரேலியாவில் இலங்கை தமிழ் பெண் ஒருவருக்கு அதிசய குழந்தை பிறந்தது. முழு கர்ப்ப காலத்திலும் கர்ப்பப்பைக்கு வெளியிலேயே வளர்ந்து உயிருடன் பிறந்துள்ளது.

இலங்கையை சேர்ந்த ரவி தங்கராஜா-மீரா என்ற தம்பதியர் அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறார்கள். இவர்களுக்கு காயத்ரி என்ற 6 வயது மகள் உள்ளார். இந்நிலையில் மீண்டும் மீரா கர்ப்பம் அடைந்தார். நிறைமாத கர்ப்பிணியாக இருந்த அவருக்கு பிரசவ வலி ஏற்பட்டதால் அவுஸ்திரேலியாவில் டார்வின் நகரில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் பிரசவத்துக்காக சேர்த்தனர்.

அங்கு அவருக்கு மகப்பேறு டாக்டர்கள் அறுவை சிகிச்சை மூலம் குழந்தையை எடுக்க தயாரானார்கள் அப்போது மீராவின் வயிற்றில் கண்ட காட்சி டாக்டர்களை திடுக்கிட வைத்தது. குழந்தை கர்ப்பப்பையில் இருப்பதற்கு பதிலாக அதற்கு வெளியே உள்ள சினைப்பையில் இருந்தது. ஒரு சிலருக்கு இப்படி சினைப்பையில் கரு உருவாகி இருந்தாலும் அதை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறிந்து அந்த கருவை அழிக்கச் செய்து விடுவார்கள். ஏனென்றால் கர்ப்பப்பைக்கு வெளியே கரு வளர்ந்து பெரிதானால் அது தாய்க்கும் சேய்க்கும் உயி ருக்கு ஆபத்தாக முடிந்து விடும்.



மீராவுக்கு பிரசவம் பார்த்த டாக்டர் ஆன்ட்ரூ மில்லர் கூறியதாவது.

ஆனால் மீராவுக்கோ முழு கர்ப்பகாலத்திலும் கர்ப்பப்பைக்கு வெளியிலேயே கரு வளர்ந்து குழந்தையாக உருவெடுத்துள்ளது. அது உயிருடனும் பிறந்து டாக்டர்களை ஆச்சரியப்படவைத்துள்ளது. இப்படி நடப்பது உலகிலேயே இதுதான் முதல்முறை என்று கருதப்படுகிறது. இதனால் அந்த பெண் குழந்தையை அசிசய குழந்தை என்று டாக்டர்கள் வர்ணிக்கிறார்கள் . அந்த குழந்தைக்கு துர்கா என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பெண்ணின் சினைப்பை உற்பத்தி செய்யும் கரு முட்டையுடன் ஆணின் உயிரணு இணைந்து கரு உண்டாகும். இந்தக் கரு கருக்குழாய் வழியாக பயணம் செய்து கர்ப்பப்பையை அடைந்து குழந்தையாக வளரும். இது தான் இயல்பான நடைமுறை. ஆனால் மீராவுக்கோ கரு கருக்குழாய் வழியாக கர்ப்பப்பைக்குச் செல்லாமல் சினைப்பையிலேயே தங்கி குழந்தையாக வளந்து விட்டது.

சினைப்பையின் வலப்புறத்தில் குழந்தையை பார்த்தவுடன் என்னால் நம்ப முடியவில்லை. சினைப்பையின் தோல் மெல்லியதாக இருந்ததால் உள்ளே இருந்த குழந்தையின் தலை முடியையும் முக தோற்றத்தையும் என்னால் பார்க்க முடிந்தது. குழந்தை வளரும்போது சினைப்பை கிழியும் அபாயம் உள்ளது. எந்த நேரமும் சினைப்பை கிழிந்து அதனால் தாய்க்கும் சேய்க்கும் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனால் மீராவுக்கு அப்படி நடக்க வில்லை. அவர் உண்மையிலேயே அதிர்ஷ்ட சாலி. இன்னும் சொல்லப்போனால் அவருக்கு கர்ப்பப்பைக்கு வெளியே குழந்தை வளர்வதை ஆரம்பத்திலேயே கண்டிருந்தால் அதை கலைக்க சொல்லி இருப்போம். ஆனால் அப்படி நடக்காமல் அவர் நன்றாக குழந்தையை பெற்றுள்ளார். இது மருத் துவ உலகிலேயே ஒரு அதிசய சம்பவம். இப்படி ஒரு சம்பவத்தை இதற்கு முன்பு நான் கேள்விப்பட்டது கூட கிடையாது இவ்வாறு அவர் கூறினார். (ஓ-5)

# அவுஸ்திரேலியாவில் பணக்காரர் பட்டியலில் இடம்பிடித்துள்ள இலங்கைத் தமிழர்

அவுஸ்திரேலிய குவீன்ஸ்லண்ட்டில் வாழும் வம்சாவளியான் மகா சின்னத்தம்பி என்பவர் 2008ஆம் ஆண்டிற்கான 10ஆவது செல்வந்தராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கட்டட நிர்மாண மற்றும் காணி அபிவிருத்தி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இவரது சொத்து மதிப்பு 57 கோடியே 10 இலட்சம் அவுஸ்ரேலிய டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் ‘கூரிய மெயில்’ எனும் செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

இளமைப்பருவத்தில் பொருளாதாரத்தில் பாரிய பின்னடைவில் வாழ்ந்த இவர் பெரும் சிரமத்தின் மத்தியில் தனது தாயாரின் உதவியுடன் கத்தோலிக்க பாடசாலையில் பயின்று வந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1962 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவிற்கு கடல் மார்க்கமாக சென்ற இவர். சிவில் பொறியியலாளராக பட்டம் பெற்று தமது சொந்த வர்த்தகத்தை 1986ஆம் ஆண்டு ஆரம்பித்தார். தமது வெற்றிக்கு கடுமையான உழைப்பும் கல்வித் தகைமையுமே முக்கிய காரணம் என இலங்கை வம்சாவளியான வர்த்தகர் மகா சின்னத்தம்பி தெரிவித்துள்ளார். (ஓ-5)

## சினிமாத் துளிகள்

''என்னுடைய நடிப்பு அனுபவத்தில் தசாவதாரம் தயாரிப்பாளரைப் போல பெருமனசாளியை இதுவரை பார்த்ததில்லை. அறுபது கோடியைப் போட்டுவிட்டு மிகவும் அமைதியாயிருக்கிறார்'' என்கிறார் கமலஹாசன்.

(உங்களுக்கும் அவர் நரசிம்ம அவதாரம் எடுத்தால் உள்ளதும் போய்விடுமே என்ற மனதிற்குள் குமுறிக் கொண்டிருப்பார்)

தசாவதாரம் படத்தில் ஐயர் வீட்டுப் பெண்ணாக அசின், சொந்தக் குரலில் ஐயர் பாஷை பேசி நடிப்பதைப் பார்த்து கமல் அசந்தே போய்விட்டாராம்.

♦♦♦

மலைக்கோட்டை பட வெற்றிக்குப் பிறகு தனது தொகையை விசால மாக்கிக் கொண்டிருக்கிறார் விஷால். இப்போது மூன்று கோடியாம்.

♦♦♦

நயன்தாராவும், ஸ்ரேயாவும் இணைந்து தெலுங்கில் பாஸ் என்ற படத்தில் அதிரடி கவர்ச்சியுடன் காட்சியளிக்கிறார்களாம்.

♦♦♦

வெகுநாட்களுக்கு பின்பு மம்முட்டி, தமிழ்த்திரையில் தலை காட்டுகிறார். அவருக்கு மிகவும் பிரபலமான சிபிஐ ரோலில் அறுவடை, வந்தேமாதரம் என்று மலையாளத்தில் வந்த இந்தப் படம் வரிச் சலுகையை மனதில் கொண்டு பெயர் மாற்றம் செய்யப் பட்டிருக்கிறதாம் (பொறுக்கி, போக்கிரிக்கு சலுகை கொடுக்கலாம் வந்தே மாதரத்துக்கு கொடுக்கக் கூடாதா?)

♦♦♦

கவிதா என்ற தன் சொந்தப் பெயரிலேயே படம் தயாரிக்க நிறுவனம் தொடங்கியிருக்கிறார் கௌசல்யா. முதல் படம் கன்னடத்தில் தான் இருக்குமாம் (அப்பாடா)

♦♦♦

பிராணிகள் என்றால் பாவனாவிற்கு கொள்ளைப் பிரியமாம் அவர் அதனால் 'ப்ளூ-கிராஸ்' உறுப்பினராம் (உங்களையே நினைத்து கொண்டிருக்கும் அப் பிராணிகளையும் கொஞ்சம் கவனிப்பீர்களா?)

♦♦♦

தெனாவட்டு படப்பிடிப்பின் பாதியில் படத்தின் தயாரிப்பாளரை திடீரெனக் காணவில்லை படத்தை தொடரக் காசு இல்லாததால் சொல்லாமல் ஜூட் விட்டு விட்டாராம் அவர்.

♦♦♦

'காதல்' நடிகைக்கும் மலையாள மொழி நடிகருக்கும் சேர்ந்து நடிக்கும் போது நெருங்கிய நட்பாகி விட்டது. ஆனால் 'காதல்' நடிகை வீட்டில் தான் கடும் எதிர்ப்பாம்.

♦♦♦

நடிகை லட்சுமிராயும் எடிட்டர் அன்ரனியும் அடிக்கடி ஒன்றாகவே காணப்படுகிறார்களாம்.

♦♦♦

'' என் கேரக்டரைப் பற்றி நன்கு தெரிந்து அது வித்தியாசமானது என்று தெரிந்தால் தான் கால்சீட் பற்றிப் பேசுவேன். ஆனால், நான் கால்சீட் கொடுப்பதற்கு லொள்ளு செய்கிறேன் என்று கதையைக் கட்டி விட்டார்கள்'' எனக் கண்ணீர் வடிக்கிறார் சதா.

♦♦♦

கீர்த்தி சாவ்லா வீட்டில ''ஜல் ஜல்'' சலங்கைச் சத்தம் தினம் நான்கு மணி நேரம் பரத நாட்டியப் பயிற்சி எடுத்துக் கொள்கிறாராம் கலைஞரின் உளியின் ஓசை படத்தில் சாமுண்டி என்ற பாத்திரத்தில் நடிக்கிறாராம்.

♦♦♦

'காதல்' படத்தின் அப்பாவித் தோழியாக சந்தியாவுடன் அலைந்த சரண்யா இப்போது புஜிதா எனப் பெயர் மாற்றம் செய்துள்ளார். 'விளையாட்டு', 'திருவாசகம்' படங்களில் ஹீரோயினாக நடிக்கிறார்.

## விக்ரம்



எந்த வேடமாக இருந்தாலும் நடிக்கத் தயார் என்று சவால் விட்டு சாதனைகளைப் படைத்து வரும் நடிகர் விக்ரம் கந்தசாமி படம் மூலம் பின்னணி பாடகர் அவதாரம் எடுக்கிறார். கலைப் புலி எஸ் தாணு தயாரிப்பில் டைரக்டர் சுசி கணேசன் இயக்கும் படம் கந்தசாமி. இந்தப் படத்தில் நாயகர் விக்ரமுக்கு ஜோடியாக நடிகை ஸ்ரேயா நடிக்கிறார். படத்தில் இதில் மொத்தம் 5 பாடல்கள் இடம் பெறுகின்றன. இதில் டூயட் பாடல் ஒன்றை சுசித்ராவுடன் இணைந்து சொந்தக் குரலில் விக்ரம் பாடியிருக்கிறார். எக்ஸ்கியூஸ்மி மிஸ்டர் கந்தசாமி என்று தொடங்கும் அந்தப் பாடலுக்கு தேவி ஸ்ரீபிரசாத் இசை யமைத்துள்ளார். இந்தப் பாடலுக்கான சூட்டிங் அடுத்த மாதம் மெக்சிகோ நாட்டில் நடக்கவிருக்கிறது. இதற்காக விக்ரம், ஸ்ரேயா மற்றும் கந்தசாமி குழுவினர் மெக்சிகோ செல்ல விருக்கிறார்கள்.

## மீண்டும் வருகிறார் பூமிகா



பத்ரி, ரோஜாக் கூட்டம், சில்லுனு ஒரு காதல் ஆகிய படங்களில் நடித்தவர் நடிகை பூமிகா. இந்திப் படங்களில் பிஸியான நடிகையாக இருக்கும் இவர் மீண்டும் தமிழ் படமொன்றில் நடிக்க விருக்கிறார். டைரக்டர் நானுஸ்ரீ ஹரி இயக்கும் ஆனந்தம் ஆயிரம் என்ற புதுப் படத்தில் பூமிகா நடிக்க ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

இப் படத்தில் பூமிகாவுக்கு ஜோடியாக சிவா என்ற புது முக நடிகர் நடிக்கிறார். பூமிகா திருமணத்துக்கு பிறகு தமிழில் நடிக்கவுள்ள படம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இதற் கிடையில் டைரக்டர் மு. களஞ்சியம் இயக்கி வரும் என் கனவு நீ தானா என்ற படத்தில் நடிக்குமாறு பூமிகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



## சினி விமர்சனம்

# பாண்டி

தயாரிப்பு:வி.இத்தேஷ் ஜபக்

நட்சத்திரங்கள்:ராகவாலோறன்ஸ்,கஞ்சாகருப்பு, ஸ்ரீமன்,இளவரசு,ராஜ்கபூர், நாசர்,மயில்சாமி,சிநேகா, சரண்ஜா மற்றும் பலர்.

கதை,திரைக்கதை ,வசனம்,இயக்கம்: இராசு மதுரவன்

நாயகன் லோறன்ஸ் துபாயில் தெருவைச் சுத்தம் செய்யும் தொழிலாளியாக அறிமுகமாகிறார். அங்கிருக்கும் ஒருவர் மீது தெரியாமல் இடித்துவிட அதனால் ஆத்திரப்படும் அவர் லோறன்சை அடிக்க இதைப் பார்த்து கோபப்படும் தனது நண்பர்களைத் தடுத்து ''எதிர்க்கிறவன் அடிக்கிறது ஆம்பளையில்லடா ஒரு குடும்பத்த தோள்ல சுமந்து காப்பாத்துகிறவன் தான் ஆம்பள...'' எனும்போது, ஏதோ ஒரு அழுத்தமான கதை பிளாஷ்பேக்கில் வரப் போகிறது என்று ஊகித்துவிட முடிகிறது.

கிராமத்தில் தன் தாயைப் பற்றி தவறாகப் பேசியவனின் நாக்கை அறுத்துவிட்டு சிறைக்குச் செல்கிறார் லோரன்ஸ். ஒருவர் மேல் கிரிமினல் குற்றச்சாட்டு பதிவாகி, அவர் சிறைக்குச் சென்றிருந்தால், அவருக்கு வெளிநாடு செல்வதற்கான கடவுச்சீட்டு கிடைக்காது என்பதை இயக்குநருக்கு யாராவது சொல்லியிருக்கலாம். சிறையில் இருந்து வெளியே வரும் லோரன்ஸ்,தவிர்க்க முடியாத சூழலில்,தன் தங்கையின் திருமணத்திற்காக வாங்கிய கடனை அடைப்பதற்காக, கட்டிய மனைவியை தவிக்கவிட்டு,வெளிநாடு செல்கிறான். இங்கு தந்தையின் விரோதி ராஜ்கபூர். சதி செய்து அவரை தீர்த்துக்கட்ட முயலும்போது, எதிர்பாராத விதமாக லோரன்சின் தாய் இறந்துவிட, இந்த துயர செய்தி தாய் மீது அதிக பாசம் கொண்டிருக்கும் லோரன்சிற்கு தெரிவிக்கப்படாமல் மறைக்கப்படுகிறது. அவர் தாயகம் திரும்பியவுடன், இறந்த தாயை எண்ணி வருந்துகிறார்.



இந்நிலையில் தான் தாயின் மரணம் இயற்கையானதல்ல என்று தெரிய வருகிறது. சதிகாரர்களை லோரன்ஸ் எப்படி வேட்டையாடுகிறார் என்பது தான் உச்சக் கட்ட காட்சி.

தன்னை நம்புங்கள் என்று தந்தையிடம் லோரன்ஸ் கெஞ்சுவது, கிராமப்புற இளைஞர்களின் நிஜமான எண்ண ஓட்டத்தின் பதிவு. பொலிஸ் அதிகாரியின் மகளாக அறிமுகமாகும் சினேகாவின் கதாபத்திரத்தில் இருபது வருட முந்தைய சினிமா கதாநாயகிகளின் கதாபாத்திர வடிவமைப்பு. அந்த கதாபாத்திரம் மது அருந்துவது போல் காட்சியமைக்கப்பட்டிருப்பது நகைச் சுவைக்காகத் தான் என்றாலும் ஒட்டவில்லை. ஆனால் சினேகாவை இப்படி கவர்ச்சியாக காட்டியிருப்பதற்காக இயக்குநரை பாராட்டலாம். நமீதாவிடம் இந்தப் படத்தில் ''உங்களுக்கு இரண்டு பாடல்கள் மற்றும் இரண்டு காட்சிகள் மட்டும் தான் என்று சொல்லியிருப்பார்களோ'' என்று எண்ணத் தோன்றுகிறது. நமீதாவின் கவர்ச்சி நடனம். சினேகாவின் முன் செல்லாக் காசா கிறது. மயில்சாமி சொல்லும் ''தொப்புள்'' கொமடி நல்ல கற்பனை. இந்தக் காட்சியில் திரையரங்கமே சிரிப்பால் அதிருவது கண்கூடு. ராஜ்கபூர் நாயகனிடம் அடிவாங்கி இறக்கும் வழக்கமான சினிமா வில்லன். ''வாந்தி எடுக்கிறது எங்க முகத்துல , சாஞ்சுக்கிறது அங்கயா..'' என்று கூறி நகைச் சுவைக்கு பலம் கூட்டுகிறார் கஞ்சா கருப்பு.



பிளாஷ்பேக் என்ற திரைக்கதை உத்தியின் இலக்கணத்தை, இயக்குநர்கள் சரிவர புரிந்துகொள்ளவில்லை என்பதற்கு இந்தப் படமும் ஒரு சாட்சி. படத்திற்கு பாடல்கள் பலம் சேர்க்கின்றன. குறிப்பாக ''மாசி மாசம்...'' என்ற பாடலின் ரீமிக்ஸ், அதற்கு சினேகா மற்றும் லோரன்சின் நடனம். ஒளிப்பதிவு செய்திருக்கும் யு.கே. செந்தில்குமார் துபாயின் அழகையும், சினேகாவின் கவர்ச்சியையும் ரம்மியமாக பதிவு செய்திருக்கிறார். நடனத்தைப் போலவே சண்டைக் காட்சியிலும் வேகத்தைக் காட்டியிருக்கிறார் லோரன்ஸ். நடிப் பதற்குத்தான் சற்று சிரமப்படுகிறார்.

இதை இயக் குநர், தன்னுடைய வேகமான திரைக் கதையால் சமாளிக்கிறார். இளவரசு கதாபாத்திரம் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

எளிமையான கதை,வேகம் குறைவான திரைக் கதை, நகைச்சுவை, கவர்ச்சி, சண்டைக் காட்சிகள் , ரீமிக்ஸ் பாடல், சலிக்காத வலுவான அம்மா செண்டிமென்ட் என இவ்வளவு இருந்தும் ஏதோ ஒன்று குறைவது போல இருக்கிறது.

# டி.வி.தொடருக்கு கால்ஷீட் கொடுத்ததால் ரஜினியுடன் நடிக்கும் வாய்ப்பை இழந்தேன்—சிம்ரன்

டி.விதொடருக்கு கால்ஷீட் கொடுத்ததால் ரஜினி படத்தில் நடிக்கும் வாய்ப்பை இழந்தேன் என்று சிம்ரன் கூறினார்.நடிகை சிம்ரன் சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அதன் விபரம் வருமாறு,

*கேள்வி: ரஜினியுடன் குசேலனில் நடிக்க உங்களுக்கு அழைப்பு வந்ததா?*

பதில்: ஆமாம் வந்தது. டெலிவிஷன் தொடரில் நடிக்க கால்ஷீட் கொடுத்ததால் குசேலன் படத்துக்கு நேரம் ஒதுக்க முடியவில்லை. ஏற்கனவே ''சந்திரமுகி'' படத்தில் குடும்ப சூழ்நிலை காரணமாக நடிக்க முடியவில் லை. ரஜினியுடன் நடிக்க இரு படங்களுக்கு வாய்ப்பு வந்தும் நடிக்க முடியாமல் போனதும் வருத்தமளிக்கிறது.



*கே.தமிழ் திரையுலகில் சிம்ரன் இடம் காலியாக இருக்கிறதே?*

பதில்: சந்தோஷமாக இருக்கிறது. ஆனாலும், புது நடிகைகள் சிறப்பாகத்தான் நடிக்கிறார்கள். மொழியில் ஜோதிகாவும், பருத்திவீரனில் பிரியாமணியும், பில்லாவில் நயன்தாராவும், கஜனியில் அசினும், சிவாஜியில் ஸ்ரேயாவும் அசத்தி இருக்கின்றனர்.

*கேள்வி:நடிகைகளில் உங்கள் வாரிசு யார்?*

ப: எல்லா நடிகைகளிடமும் திறமை உள்ளது. திரிஷா,நயன்தாரா, ஸ்ரேயா எனக்கு பிடித்த நடிகைகள் , ஒல்லியான வட இந்திய நடிகைகளால் தான் தமிழ் படங்களில் ஜொலிக்க முடியும் என்ற கணிப்பு இருந்தது. அது இப்போது பொய் ஆகி இருக்கிறது. குண்டாக இருக்கும் தென்னிந்திய நடிகைகள் வெளுத்துக் கட்டுகிறார்கள்.

*கேள்வி:கதாநாயகியாகத் தான் நடிப்பேன் என்று நிபந்தனை விதிக்கிறீர்களாமே?*

பதில்:எனக்கு 32 வயது ஆகிறது.வயதான வேடங்களில் என்னால் நடிக்கமுடியாது.திருமணம் ஆன உடன் கவர்ச்சிபோய் விடும் என நினைப்பது தவறு.இந்திப் படங்களில் திருமணமான நடிகைகள் கதா நாயகிகளாக நடிக்கின்றனர்.

*கேள்வி: குழந்தை பெற்ற பின் சினிமாவுக்கு வருவதை குடும்கத்தினர் எதிர்க்கவில்லையா?*

பதில்:இல்லை என் மாமியார் இன்னும் வங்கியில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். என் குடும்பத்தினர் வேலை செய்வதற்கு முக்கியத்துவம் அளிப்பவர் கள். என்னை அவர்கள் ஊக்குவிக்கிறார்கள். *கேள்வி: டி.வி.யில் நடிக்க பிடிக்கிறதா?*

பதில்: நான் சினிமாவுக்கு வரும் முன் டி.வி.யில் தான் வேலை பார்த்தேன்.டி.வி நிகழ்ச்சிகள் கிராமம் வரை போய் சேர்க்கிறது அவற்றை குறைவாக மதிப்பிடக்கூடாது.

*கேள்வி: அரசியலில் மீண்டும் குதிப்பீர்களா?*

பதில்: அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்கு இல்லை. ஆனாலும்,நாளை எப்படி இருக்கும் என்று யாருக்கும் தெரியாது. இவ்வாறு சிம்ரன் கூறினார். பிரமீட் சாய்மீரா நிறுவனம் ஒரு மாதத்திற்கு ஒரு கதை வீதம் வருடத்திற்கு 12 கதைகளை கொண்டு டி.வி. தொடர் தயாரிக்கிறது. இந்த தொடருக்கு சிம்ரன் திரை என்று பெயர் வைத்துள்ளனர்.பெரிய திரையில் கலக்கிய சிம்ரன் முதல் முறையாக சின்னத்திரையில் இதன்மூலம் கால் பதிக்கிறார். சிம்ரனை மையமாக வைத்து கதை சுழலும். 'சிம்ரன் திரை' தொடக்கவிழா சென்னையில் நடந்தது.

இதில் சிம்ரன் கலந்துகொண்டு பேசியதாவது,நான் 95ஆம் ஆண்டில் டி.வி.யில் ஒரு நிகழ்ச்சி செய்தேன்.அதன் பிறகுதான் சினிமாவில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. டி.வி.தொடரில் நடிப்பதன் மூலம் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. பெரிய திரையும், சின்னத்திரையும் ஒன்றுதான். எந்த வேறுபாடும் கிடையாது என்றார்.

# ரஹ்மானுக்கு வாழ்நாள் சாதனை விருது



ஏ.ஆர். ரஹ்மானுக்கு வாழ்நாள் சாதனைக்கான விருதை இன்டர்நெஷனல் இந்தியன் பிலிம் அக்கடமி நிறுவனம் (ஐ.ஐ.பி.ஏ.) வழங்குகிறது. இந்த விருது அறிவிப்பை ஐ.ஐ.பி.ஏ. நிறுவனம் அண்மையில் அறிவித்தது.

வரும் ஜுன் 6ஆம் திகதி தாய்லாந்து தலைநகர் பாங்கொக் நகரில் அதி விமரிசையாக நடக்கும் விழாவில் ரஹ்மானுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இசையுலகுக்கு ரஹ்மானின் பங்களிப்புக்காகவும் , இந்திய இசையை உலகம் முழுவதும் மிகக் குறுகிய காலத்திலேயே பிரபலப்படுத்தியதற்காகவும் இந்தச் சாதனை விருதை அளிப்பதாக ஐ.ஐ.பி.ஏ. குறிப்பிட்டுள்ளது. அக்கடமி அமைப்பாளர்களில் ஒருவரான பொலிவுட் நட்சத்திரம் அமிதாப் பச்சனிடம் இருந்து இவ் விருதை ரஹ்மான் பெறவுள்ளார். ஷாருக்கான் , ஐஸ்வர்யா பச்சன் ஆகியோர் இந்த விழா வில் அழைக்கப்பட்டுள்ள முக்கிய விருந்தினர்கள் ஆவர்.

## அதிபர் பதவியை ராஜினாமா செய்யமாட்டேன் பாகிஸ்தான் அதிபர் -முஷாரப்



(இஸ்லாமாபாத்)

அதிபர் பதவியை ராஜினாமா செய்யப்போவதாக சிலர் வதந்தி பரப்பி வருகின்றனர். ஒருபோதும் , பதவியை ராஜினாமா செய்ய மாட்டேன் என பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறினார்.

பாகிஸ்தான் , பஞ்சாப் மாகாண கவர்னர் காலித் மக்பூல் , பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். இதையொட்டி கடந்த வியாழக்கிழமை இரவு இஸ்லாமாபாத்தில் விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

இதில், அதிபர் முஷாராப், பிரதமர் கிலானி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## உலக தரிசனம்

அப்போது ,முஷ்ரப் பேசியதாவது , கடந்த சில நாட்களாக , என்னை மையமாக வைத்த தவறான தகவல் பரப்பப்படுகிறது. அதிபர் பதவியை ராஜினாமா செய்யப் போவதாகவும் இராணுவக் குடியிருப்பில் இருந்து, நான் வெளியேறப் போவதாகவும் செய்திகள் வெளியாகின்றன.

இராணுவ தலைமை தளபதியை சந்தித்து பேசியதில் இருந்து இது போன்ற தகவல்கள் வெளியாகின்றன.

இராணுவ தளபதியை சந்திப்பது என்பது , வழக்கமான நடவடிக்கைதான். இது போன்ற வதந்திகளால்,பங்குச் சந்தையில் கடும் சரிவு ஏற்பட்டுள்ளது. வதந்திகள் தொடர்ந்தால், பெரிய அளவில் பொருளாதார பாதிப்பு ஏற்படும். வெளிநாட்டு முதலீடும் பாதிக்கப்படும்.

நாட்டை சுமுகமாக வழி நடத்திச் செல்ல, பிரதமருக்கு உறுதுணையாக இருப்பேன். அதிபர் பதவியை ஒருபோதும் ராஜினாமா செய்யமாட்டேன்.

இவ்வாறு முஷாரப் கூறினார். பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஜா கிலானி கூறுகையில் ,

முஷாரப்பை அதிபர் பதவியில் இருந்து நீக்க வேண்டு என , நவாஸ்ஷெரிப் வலியுறுத்தி வருகிறார். இது பற்றி பாராளு மன்றில் தான் முடிவு செய்ய வேண்டும் என்றார். (ஓ-5)

## அமெரிக்காவில் விமான விபத்து 5 பேர் பலி,65 பேர் காயம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள ஹோண்டுராஸ் என்ற இடத்தில் விமானம் ஒன்று தரையிறங்கும் போது ஓடு பாதையில் இருந்து விலகி சென்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 5 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தில் 65 பேர் காயமடைந்ததாக மீட்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மத்திய அமெரிக்காவின் டாகா நிறுவனத்திற்கு சொந்தமான ஏர்பஸ் விமானம் ஒன்று 124 பயணிகளுடன் லொஸ் ஏஞ்சல் சில் இருந்து டெகுசிகால்பா என்ற இடத்திற்கு சென்றது. டெகுசிகால்பா விமான நிலையத்தில் தரையிறங்கும் போது ஓடு பாதையில் இருந்து எதிர்பாராத விதமாக விலகி சென்ற அந்த விமானம் விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மத்திய அமெரிக்க வங்கியின் தலைவர் ஹாரி பிராட்டிகம் உள்ளிட்ட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் டெகுசிகால்பாவுக்கான பிரேசில் தூதர் பிரைன் மைக்கேல் பிரேசர் நீலி உள்ளிட்ட 65 பேர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


மோசமான வானிலை காரணமாக வெளிச்சம் இல்லாததால் இந்த விபத்து ஏற்பட்டதாக ஹோண்டுராஸ் வர்த்தக அமைச்சர் நார்மன் கார்சியா தெரிவித்துள்ளார்.

(ஓ-5)

## ஜனநாயக ஆட்சிக்கு மாறிய நேபாளத்தில் அரங்கேறி வரும் பரபரப்பான காட்சிகள்

(காத்மாண்ட்)

முதல் முறையாக ஜனநாயக காற்றை சுவாசிக்க தொடங்கியுள்ள நேபாளத்தில் பரபரப்பான காட்சிகள் அரங்கேறி வருகின்றன. கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு அரண்மனையை விட்டு ஓட்டம் பிடித்த மன்னர் ஞானேந்திரா அதிகாலையில்மீண்டும்திரும்பினார். எந்த நேரத்திலும் அவர் அரண்மனையிலிருந்து நிரந்தரமாக வெளியேறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. நேபாளத்தில் 240 ஆண்டுகளாக நடந்து வந்த மன்னராட்சி ஒழிக்கப்பட்டு மாவோயிஸ்ட் தலைமையிலான ஜனநாயக ஆட்சி அமைந்துள்ளது.



முதல்முறையாக அந்நாட்டு மக்கள் ஜனநாயக காற்றை சுவாசிக்க தொடங்கியுள்ளனர். ஜனநாயக நாடாக மாறுவதற்கு அந்நாட்டு பாராளுமன்றம் வியாழக்கிழமை முறைப்படி ஒப்புதல் அளித்தது. மன்னர் ஞானேந்திரா அரண்மனையை விட்டு வெளியேற 15 நாள் காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது.


இதற்கிடையே வியாழக்கிழமை இரவு காத்மாண்ட்டில் பரபரப்பான காட்சிகள் அரங்கேறின. அரண்மனையின் முகப்பில் இருந்த ராஜா குடும்பக் கொடி அகற்றப்பட்டு தேசிய கொடி ஏற்றப்பட்டுள்ளது. நான்கு கார்கள் மற்றும் லொறிகள் அணி வகுக்க மன்னர் ஞானேந்திரா தனது நாராயணஹிதி அரண்மனையை விட்டு நள்ளிரவில் வெளியேறியதாக தனியார் டிவி நிறுவனம் செய்தி வெளியிட்டது. பின் அதிகாலை ஞானேந்திரா மீண்டும் அரண்மனைக்கு திரும்பினார்.

இந்த விவகாரம் நேபாளத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து நேபாள அரசியல் வட்டாரங்கள் கூறியதாவது , மன்னர் ஞானேந்திரா அரண்மனையில் இருந்து எந்த நேரத்திலும் நிரந்தரமாக வெளியேறலாம். அதற்கான சூழ்நிலைகள் நிலவுகின்றன.

காத்மாண்டுவில் இருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ள நிர்மல் நிவாஸ் என்ற இடத்திற்கு ஞானேந்திரா செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே அரண்மனை நிலவரம் பற்றி ஆய்வு நடத்த தனிக் குழு ஒன்றையும் நேபாள அரசு அமைத்துள்ளது நாராயணஹிதி அரண்மனைக்குள் உள்ள பொருட்கள் பற்றி இந்த் குழு ஆய்வு செய்யும். அரண்மனையை பொருட்காட்சி சாலையாக மாற்றுவதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது இவ்வாறு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-5)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

உயர்திரு. இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

(பிரபலதொழிலதிபர்: ஆர்.வி.ஜி.பீடி கம்பனி -ஆர்.வி.ஜி.மருந்தகம்)

மலர்வு ✦ 28 ✦ 08 ✦ 1932

மறைவு ✦ 01 ✦ 06 ✦ 2006

வருடங்கள் இரண்டு ஓடி மறைந்த போதும்,
ஐயா நீங்கள் எம்மை விட்டு மறைந்தாலும்
எமது இதயங்களில் என்றும் எம்முடன்
தான் இருக்கிறீர்கள் பிறப்பும், இறப்பும்
வாழ்வில் நியதியென்றாலும் எங்கள்
நினைவுகளில் உங்கள் ஆத்மாவிற்கு
சொக்கம் நிச்சயமே. உங்கள் ஆத்மா
சாந்தி பெற நாம் யாவரும் இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ,சாந்தி, சாந்தி

குடும்பத்தினர்.

ஆர்.வி.ஜி .ஸ்தாபனம்
இல:58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(1237)

உலகில் மனிதனை விட உயர்ந்த பொருள் வேறொன்றும் இல்லை. மனிதனின் மனதை விட உயர்ந்த பொருள் ஒன்றில்லை.

—எகிப்து

வலம்புரி

## மக்களுக்கு மகத்தான பணி செய்த ஒப்புரவாளர் து.வைத்திலிங்கம்

யாழ்.மாவட்டத்தின் ஓய்வு பெற்ற மேலதிக அரசாங்க அதிபர் துரையப்பா வைத்திலிங்கம் அவர்கள் காலமானார் என்ற செய்தி ஆழ்ந்த துயரத்திற்குரியதாகும்.

யாழ்ப்பாணக் குடாநாடு மிக இக்கட்டான சூழ் நிலைக்கு ஆளான காலத்தில் து.வைத்திலிங்கம் அவர்கள் மேலதிக அரசாங்க அதிபராக பணியாற்றினார். மக்கள் அல்லல்பட்டு ஆற்றாது அலைந்த காலத்தில் மேலதிக அரசாங்க அதிபர் என்ற பொறுப்பான பதவியை வகித்த அவரால் மக்கள் ஆறுதலடைந்தனர் எனத் துணிந்து கூறலாம்.

எவரையும் இன்முகத்துடன் வரவேற்று உதவி செய்யும் பெருந்தன்மை அவரிடம் தாராளமாக இருந்தது.

பொதுமக்கள் எவரும் அவரைச் சந்தித்து தமது குறைகளை எடுத்துக் கூறவும் அவற்றுக்கு நிவாரணம் தேடக் கூடியவராகவும் இருந்த வைத்திலிங்கம் அவர்களின் முகாமைத்துவம் எளிமையானது; ஆவேசமில்லாதது; எவரின் மனதையும் புண்படுத்தாதது.

பொதுவாக உயர் அதிகாரிகள் வேலைப் பளு காரணமாகவும், சமூக ஒருங்கிணைப்பில் இருக்கக் கூடிய தனி ஆள் குறைபாடு காரணமாகவும் விரைவில் கோபமடைபவர்களாகவும், உணர்ச்சியின் உச்சக்கட்டத்துக்குச் சென்று எதைக் கதைக்கிறோம், எவருடன் கதைக்கிறோம், இப்படியெல்லாம் கதைக்கலாமா என்று தெரியாமல் சீறிச் சினந்து –துள்ளி விழுந்து கோபத்தைக் கொட்டிக் குறைக்கும் கலாசாரத்தையே கொண்டுள்ளனர்.

பலருக்குப் பொருந்துகின்ற இந்தக் கலாசாரத்தை வைத்திலிங்கம் அவர்களிடம் காண முடியவில்லையே என மக்கள் ஆச்சரியப்பட்டதும் அதிசயப்பட்டதும் உண்மை.

இதனாலன்றோ நல்ல்ல ஆதீனம் அவருக்கு 'ஒப்புரவாளர்' எனும் உயர் விருதினை வழங்கி கௌரவித்தது.

இலங்கை நிர்வாக சேவையில் உயர் பதவியை வகித்த போதிலும், ஆக்க இலக்கியத்துக்கு அவர் ஆற்றி பணி இம்மியும் குறையவில்லை. ஏராளமான சிறுகதைகள், நாவல்களை எழுதி ஈழத்தமிழரின் எழுத்துத் துறையை உலகத் தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் பேச வைத்தவர்.


அவரின் எழுத்தாக்கங்கள் சமூகப் பார்வை கொண்டவை. சமூகத்தில் இடம்பெறும் அடக்கு முறைகளை, தனது எழுத்தாற்றல் ஊடாக வெளிக்கொணர்ந்து சீர்திருத்த சிந்தையை விதைப்பதில் பெரும் பணியாற்றினார்.

இத்தகைய சிறப்பும், சமூக நோக்கும் கொண்ட அவரின் மறைவு தமிழினத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பு.

மனித நேயத்தை, தன் சேவையில் கடைப்பிடித்த அவரின் நினைவுகள் என்றும் வாழ்வுக்குரியவை.

# அடுத்த வருடத்தை தேர்தல் ஆண்டாகக் கருதி அதற்குத் தயாராக வேண்டும்

## சு.க.மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி



(கொழும்பு)

அடுத்த வருடத்தினை தேர்தல் ஆண்டாக கருதி கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். கட்சியின் வெற்றிடமாகவுள்ள தொகுதி அமைப்பாளர் பதவிகளுக்கு புதியவர்களை நியமித்து தேர்தலுக்கு தயாராக வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அலரி மாளிகையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரிமாளிகையில் இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கட்சி தொடர்பில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. மாகாண சபைகளின் ஆட்சிக்காலம் 2009ஆம் ஆண்டுடன் நிறைவடைகின்றன. 2010ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் பாராளுமன்றத்தின் ஆயுட்காலமும் முடிவடைகின்றது. எனவே அடுத்த வருடத்தினை தேர்தல் ஆண்டாகக் கருதி செயற்பட வேண்டும். வெற்றிடமாகவுள்ள தொகுதி அமைப்பாளர் பதவிகளுக்கு புதியவர்களைநியமித்து தேர்தலுக்குதயாராகவேண்டும் என்றும் ஜனாதிபதி இங்கு தெரிவித்துள்ளார்.

இதனை விட சுதந்திரக் கட்சியின் பணிகளை கண்காணிப்பதற்கு குழு ஒன்றினை நியமிக்குமாறு ஜனாதிபதி கட்சியின் செயலாளர் மைதிரி பால சிறிசேனவுக்கு உத்தரவிட்டுள்ளார் .

இதே வேளை கட்சியின் பதில் பொருளாளராக போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப் பெரும நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய குழு கூட்டத்திலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜெயராச் பெர்னாண்டோ புள்ளேயின் மறைவினையடுத்து ஏற்பட்ட சுதந்திரக் கட்சியின் பொருளாளர் பதவி வெற்றிடத்துக்கு டளஸ் அழகப் பெருமவை நியமிப்பதற்கான பிரேரணையினை கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரி பாலசிறிசேன முன் வைத்தார். இதனை மத்திய குழு உறுப்பினர்கள் ஏகமன தாக ஏற்றுக் கொண்டனர்.

அடுத்த வருடம் மாகாண சபை களை கலைத்து தேர்தலை நடத்திய பின்னர் பாராளு மன்றத்தையும் கலைத்து தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலையும் ஒரு வருடத்துக்கு முன்னர் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ஓ-5)

# சமூக சேவைகள் அமைச்சின் படிவங்களை விற்க வேண்டாம்

## அமைச்சு அலுவலகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற வறுமைக்கோட்டிற்கு உட்பட்டவர்களுக்கான மருத்துவ உதவிகள், கணவரை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட குடும்பப்பெண்களுக்கான சுய தொழில் உதவிகள், வலது குறைந்தவர்களுக்கான மருத்துவ உதவிகள், வீடமைப்பு உதவிகள் மற்றும் 3ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு உட்பட அனைத்து உதவிகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான விண்ணப்பப்படிவங்கள் குடாநாட்டு மக்களுக்கென் யாழ். அமைச்சு அலுவலகத்தில் தற்போது அமைச்சரின் கையொப்பத்துடன் வழங்கப்படுகின்றன.

இந்த விண்ணப்பப் பத்திரங்கள் அமைச்சின் மூலமும் பிரதேச செயலகங்களின் மூலமும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

எனினும் ஒருசிலர் இவ் விண்ணப்பப் படிவங்களை விற்பனை செய்து வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சுடனும் அதன் கீழ் உள்ள திணைக்களங்களுடனும் தொடர்புள்ள எந்த ஒரு விண்ணப்பப் படிவத்தையும் பொதுமக்கள் பணம் கொடுத்து வாங்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுவதுடன் அவ்வாறு விலை கொடுத்து வாங்கப்படும் விண்ணப்பங்கள் செல்லுபடியாகாது என்பதையும் அதேநேரம் முறைகேடான வகையில் மேற்படி விண்ணப்பங்களை விற்பனை செய்வோர் மீது சட்டரீதியிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமெனவும் அமைச்சு அறிவித்துள்ளது. (ந)

# இலங்கையின் வருடாந்த பணவீக்கம் மே மாதத்தில் 26.2 வீதமாக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வருடாந்த பணவீக்கம் மே மாதத்தில் 26.2 வீதமாக அதிகரித்திருப்பதாகபுள்ளிவிபரவியல்திணைக்களம் தெரிவித்துள்ளது. உணவு மற்றும் மரக்கறிகளின் விலைகள் அதிகரித் திருப்புதே கடந்த 5வருட காலத்தில் என்றுமில்லாதவாறு பணவீக்கம் அதி கரித்திருப்பதற்கு காரணம் என புள்ளி விபரவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

நுகர்வோர் விலைச்சுட்டெண் ஏப்பிரல் மாதத்தில் காணப்பட்ட 25 வீதத்திலிருந்து மே மாதத்தில் 26.2 வீதமாக அதிகரித்துள்ளதாக புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதம் வரையான ஒரு வருட காலப் பகுதியில் கடந்த ஜனவரி முதல் நுகர் வோர் விலைச்சுட்டெண் அதிகரிப்பைக் கண்டுவருவது குறிப்பிடத்தக்கது. மரக் கறி , மீன் , பருப்பு ஆகிய உணவுப் பொருட்களின் விலைகள் இக்காலப் பகுதியில் கணிசமாக அதிகரித்திருக்கின்றன என புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி டீ.பி.ராஜபக்ஷ ரொய்ட்டருக்கு தெரிவித்திருக்கிறார். பணவீக்கம் வேகமாக அதிகரித்துச் செல்லும் நிலையில் மே மாதத்தில் மையப் பணவீக்கத்தை 15 வீதமாக நிலைப்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. இதேவேளை, 2008ஆம்ஆண்டின் இறுதிக்குள் மையப் பணவீக்கத்தை 10-11 வீதமாகக் குறைப்பதை இலக்காகக் கொண்டு செயற்பட்டுவருவதாகவும் மத்திபவங்கி தெரிவித்துள்ளது. (ஓ-5)

# சமூக சேவைகள் அமைச்சின் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொழில் வாய்ப்பு விடயமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திப்பதற்கு அமைச்சரின் யாழ்.அலுவலகத்திற்கு வருகை தருபவர்கள் தங்களது கோரிக்கை கடிதங்களுடன் சுயவிபரப் படிவத்தை மாத்திரம் கட்டாயமாக கொண்டுவரும்படியும் ஏனைய சான்றிதழ்கள் எதுவும் கொண்டுவரத் தேவையில்லை என்றும் அமைச்சின் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஏற்கனவே தொழில் வாய்ப்பு தொடர்பில் அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் தங்களது பெயர்களை பதிவு செய்திருப்பவர்கள் மேற்படி அலுவலகத்தின் மூலம் தங்களுக்கு தரப்பட்டுள்ள பதிவு இலக்கத்தை கட்டாயம் கொண்டு வரும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ந)

# அறிமுகமாக்குவதே சாட்சிய வாழ்வு

உலகத்திலே அளவுகோல்கள் பல உள்ளன. தராசுகளைக் கொண்டு பொருளின் அளவை அளக்கலாம். பயிர்களின் தன்மையை அறிய நிலவளம் அளவுகோல். மலரின் தன்மை அறிய மணம் அளவுகோல். கனியின் தன்மை அறிய சுவை அளவுகோல் .அது போல மனிதனின் தன்மையை அறிய எது அளவுகோல். அது தான் அவரவரின் சிந்தனைகளும், சொற்களும், செயல்களுமே ஆகும்.


ஆண்டவர் இயேசுவும் அழகாகக் கூறுகின்றார். மரத்தை அதன் கனியால் அறியலாம்... உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும். நல்லவர் நல்ல கருவூலத்திலிருந்து நல்லவற்றை வெளிக் கொணர்வார். வாழ்விலே உயர்வடைய வேண்டும் என்று நினைக்கிறவர்களின் சிந்தனைகளும், சொற்களும், செயல்களும் உயர்ந்தவைகளாகத்தானே இருக்க வேண்டும். தான் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறவன் அடுத்தவனும் நன்றாக இருக்க வேண்டும் என்று தானே நினைக்கவேண்டும். தன்னை எல்லோரும் உயர்வாகப் பேச வேண்டும் என்று நினைக்கிறவன் அடுத்தவனையும் உயர்வாகத்தானே பேச வேண்டும். தனக்கு எல்லோரும் உதவவேண்டும்

**பரமபிதா காட்டிய பாதை**

என்று நினைக்கிறவன் அடுத்தவனுக்கும் உதவிட தன் கரங்களை நீட்ட வேண்டுமல்லவா? ஆம் , அதுபோல்தான் கிறிஸ்தவ வாழ்வின் அளவுகோல், விசுவாசம். அந்த விசுவாசத்தை அளக்கும் அளவுகோல் அவனது சாட்சிய வாழ்வு. அந்த சாட்சிய வாழ்வின் ஒரு பரிமாணம் அறிமுகப்படுத்துவது.

இங்கு ஒரு கேள்வி , யாரை யாருக்கு அறிமுகப்படுத்துவது?

நாம் யாரை விசுவாசிக்கிறோமோ அவரை அறிமுகப்படுத்த வேண்டும். யாருக்கு அறிமுகப் படுத்துவது? அவரை அறியாதவர்களுக்கும், அவரை அறிய துடிப்பவர்களுக்கும் அறிமுகம் செய்ய வேண்டும்.



அப்படியென்றால் நாம் அறிமுகப் படுத்தவேண்டியது நம் ஆண்டவர் இயேசுவை. நாம் வாழுகின்ற இடங்களில் உள்ள மக்களுக்கு, அவரைப் பின்பற்ற நினைக்கிறவர்களுக்கு, அவரை அறியாமல் இருப்பவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். அப்படி செய்தால் அதுவே நம் சாட்சிய வாழ்வாகும்.

**ஜோன் ரொபேர்ட்**

படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்






அன்பு வாசகர்களே!

நயினாதீவு நாகபூஷணி அம்மன் மகோற்சவத்தை ஒட்டி வலம்புரி வருடந்தோறும் வெளியிடும்

நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

பகுதிக்கு கவிதை எழுதுபவர்கள் ஆகக் கூடியது எட்டு (8) வரிகளுக்கு மேற்படாமல் கவிதையை எழுதுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


## படையினரின் வாகன விபத்தில் இருவர் பலி; எட்டுப் பேர் காயம்

(கொழும்பு)

கதிர்காமத்தில் இராணுவத்தினர் பயணித்த வாகனம் விபத்தில் சிக்கியதில் படையினர் ஒருவரும் கடற்படையைச் சேர்ந்த ஒருவருமாக இருவர் உயிரிழந்துள்ளனர். ஆறு படையினரும் இரண்டு கடற்படையினரும் என 8 பேர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறைப் பகுதிக்குச் சென்று கொண் டிருந்த படையினரையும் கடற்படையினரையும் ஏற்றிச் சென்ற வாகனமே இந்த விபத்தில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் சம்பவ இடத்திலேயே இருவர் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-5)

## தேர்தல் நடத்துவதற்குத் தடை விதிக்கக் கோரி ஐக்கிய தேசியக் கட்சி வழக்குத் தொடர முடிபு

(கொழும்பு)

17-வது அரசியல் அமைப்புத் திருத்தத்தைச் செயற்படுத்தி அரசியல் அமைப்புச் சபையை நிறுவவும் சுயாதீன ஆணைக்குழு செயற்படும் வரை எந்தவொரு தேர்தலையும் நடத்த தடைவிதித்தும் தேர்தல் ஆணையாளருக்குத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அடுத்த வாரம் உயர் நீதிமன்றத்தினை நாடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

சுயாதீன ஆணைக்குழுவை செயற்படுத் தும் வரை இந் நாட்டில் சுதந்திரமான , நேர்மையான, பக்கச்சார்பற்ற தேர்தல் நடை பெறாது என்று சுட்டிக்காட்டிய திஸ்ஸ அத்த நாயக்க,

தேர்தல் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக செயற்படுவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு போதியளவு அதிகாரமோ, நிர்வாகக் கட்டமைப்போ இல்லை என்றும் தெரிவித்துள்ளார். (ந-5)

## வெள்ளவத்தையில் இருவர் உயிரிழப்பு

வெள்ளவத்தையில் நேற்றிரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டும் 10 பேர் காயமடைந்ததாகவும் இராணுவம் அறிவித்துள்ளது.

காயமடைந்தவர்கள் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை கொழும்பு கிராண்பாஸிலுள்ள மின்மாற்றி ஒன்றும் நேற்றிரவு 9 மணியளவில் தகர்க்கப்பட்டுள்ளது. (ந-5)

## வாரத்தில் 4 நாள்...

எனவும் கூறப்படுகின்றது.

பாடசாலை நாள்களை வாரத்தில் நான்கு நாள்களாக்கும்போது பாடசாலை நேரம் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை யாக இருக்கும் எனவும் இது தொடர்பான அனுமதியைப் பெறும்பொருட்டு எதிர்வரும் 4 ஆம் திகதி அமைச்சரவைக்குப் பத்திரம் சமர்ப்பிக்கப் படும் எனவும் கல்வி அமைச்சுத் தெரிவித்துள்ளது. (ந-5)

## றெஜி ரண...

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கங்களில் பிரதி அமைச்சராகவும் அமைச்சராகவும் பணியாற்றினார்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் அவர் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படும் முன்னர் சப்ரகமுவ மாகாண ஆளுநராகவும் பணியாற்றினார்.

சிறிபதி சூரியாராச்சி உயிரிழந்ததையடுத்து அவரின் வெற்றிடத்திற்கு றெஜி ரணதுங்க நியமிக்கப் பட்டிருந்தார். (ந-5)

## சர்வகட்சிக் குழுவில்...

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிலிருந்து தற்காலிகமாக விலகியிருந்த ஜாதிக ஹெலஉறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி என்பன மீண்டும் அந்தக் கூட்டத்தில் பங்குபெறுவதாக அறிவித்திருப்பதாக சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க கிழக்கு மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுக் கூட்டத்தில் பங்குபற்ற பிள்ளையான் தரப்பு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## மூதூரில் ஊர்காவற்படை...

இரண்டு இனந்தெரியாத நபர்கள் அப் பகுதியில் நின்ற ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவரைச் சுட்டுக்கொலை செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தையடுத்துத் தமிழர்கள் வசிக்கும் கங்குவேலிக்குள் நுழைந்த ஊர் காவற்படையினர் அங்கு கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதுடன் வன்முறையிலும் ஈடுபட்டனர்.

இதில் நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். இந்த நிலையில் கிளிவெட்டியில் நேற்று மதியம் ஒரு மணியளவில் இரண்டு பிள்ளைகளின் தந்தையான தமிழ் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவங்கள் குறித்து மூதூர்ப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-5)

## ஜனநாயக - மனித உரிமைகளை...

இது தொடர்பில் அமெரிக்காவின் ஜனநாயக அமைப்பினால் வெளியிடப்பட்ட 2008 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் மனித உரிமைகள், ஜனநாயகச் செயற்பாடுகளை மேம் படுத்துவதற்கு அமெரிக்கா தனது கூட்டணி நாடுகளுடன் இணைந்து பணியாற்றவுள்ளது.

சிறுபான்மை மக்களுக்கு அதிக அதிகாரங்களை இலங்கை அரசு வழங்க வேண்டும் என்பதை அமெரிக்கா வலியுறுத்துவதுடன் அதற்கான அழுத்தங்களையும் மேற்கொள்ளும்.

மனித உரிமை மீறல்களை நிறுத்துவதற்கும் ஊடக மற்றும் மத சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கு மான அழுத்தங்களையும் அமெரிக்கா மேற்கொள்ளும். சுதந்திரமுள்ள, மனித உரிமைகளை மதிக்கும் ஜன நாயக நாடுகளின் வட்டத்தை அதிகரிப்பதே எமது நோக்கம்.

இந்த நாடுகள் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதுடன் அனைத்துலக விதிமுறைகளையும் மதிக்க வேண்டும். இலங்கை முழு வதும் மனித உரிமைகள் மோசமடைந்துள்ளன.

இராணுவம், பொலிஸ் மற்றும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினர் பொதுமக்களுக்கு எதிராக தாக்குதல்கள், துன்புறுத்தல்கள், கடத்தல்கள், நீதிக்குப் புறம்பான படுகொலைகள், கப்பம் அறவிடுதல், சந்தேகத்தின் பேரிலான கைதுகளில் ஈடுபடுவதாக அறிக்கைகள் பல வற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளும் பொது மக்கள் மீதான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது. (ந-5)

## வன்னியிலுள்ள தமிழரை...

இலக்கு வைக்கும் தற்கொலைத் தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. இந்தத் தாக்குதல்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளையே இலங்கை அரசாங்கம் மேற் கொண்டுள் ளது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நிலைப் பாட்டிற்கு சர்வதேச சமூகம் ஆதரவு வழங்கி ஊக்குவிக்க வேண்டும். வன்னியிலுள்ள தமிழ் மக்களை மீட்கும் நோக்கத்தில் இலங்கை அரசாங்கம் உறுதியாகவுள்ளது.

பயங்கரவாதத் தாக்குதல்கள் காரணமாக இலங்கையின் பொருளாதாரத் துறை சவால்களைச் சந்தித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்ட தேர்தலில் மக்கள் தமது தலைவரைத் தேர்ந் தெடுத்துள்ளனர். வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் சர்வதேச தொண்டு நிறுவனங்களையும் கிழக்கின் அபிவிருத்தியில் பங்கெடுக்குமாறு அழைக்கின்றோம்.

இலங்கை அரசாங்கம் இராணுவத் தீர்வில் நாட்டங் கொண்டுள்ளதாகச் செய்யப்படும் பிரசாரத்தில் எதுவித உண்மையும் இல்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்காக அரசாங்கம் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவை உருவாக்கித் தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்தத் தீர்வுத் திட்டத்திற்கு தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் தமது பெரும்பான்மையான ஆதரவைத் தெரிவித்துள்ளன. ஆனால் புலிகள் தொடர்ந்தும் பயங்கர வாதத்தாக்குதல்களை நடத்துகின்றனர்.

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணும் வழிமுறைகளை எதிர்பார்த்திருக்கிறது. புலிகள் இது வரை அதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தவில்லை.

புலிகள் பேச்சு மேசைக்கு வரலாம். ஆனால் பேச்சு மேசையில் நேர்மையாகச் செயற்பட வேண்டும். அத்துடன் நிரந்தர சமாதானத்தை நோக்கியதாக அந்தப் பேச்சுவார்த்தை இருக்க வேண்டும் என்பதுடன் அவர்கள் ஆயுதங்களை ஒருபக்கமாக வைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகமவும் சிங்கப்பூருக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்டிருந்தார். (ந-5)


அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் ஒரு விலைக் கழிவு...



| | |
|---|---|
| 2.0 GHz Intel Fentium Dual Core | 3.0 GHz Intel Pentium |
| ASUS Board (P5 GC - MX-1333) | ASUS Board (P5 GC - MX-1333) |
| 1GB DDR-II Kingston Ram | 1GB DDR-II Kingston Ram |
| 160GB SATA HDD | 80GB SATA HDD |
| 15" View Sonic Monitor | 17" View Sonic Monitor |
| ATX Cabinet | ATX Cabinet |
| SONY DVD Writer | SONY DVD Writer |
| UPS (EAST) | UPS (EAST) |
| PS/2 Key Board | PS/2 Key Board |
| Optical Mouse & Pad | Optical Mouse & Pad |
| Dust cover | Dust cover |
| 54,000 | 53,500 |
| 3 வருட முழு உத்தரவாதத்துடன்... | 3 வருட முழு உத்தரவாதத்துடன்... |

கணினியில் வைரஸ் தொல்லையா? மொனிற்றர் மற்றும் யு.பி.எஸ். பழுதடைந்து விட்டதா? எதுவாயினும் எடுத்து வாருங்கள் ;நிவர்த்தி செய்து தருகின்றோம்.

| JAFFNA | NELLIADY | CHAVAKACHCHERI |
|---|---|---|
| MARSHA SYSTEMS (PVT) LTD | TEKNEL COMPUTERS& TECHNOLOGY | SCOT COMPUTER CENTRE |
| #74, Kannathiddy Junction, Jaffna | 364/364, Kodikamam Road, Nelliady. | Katkuly 1st Lane, Post Office Road,Chavakachcheri. |
| T.P. 021 222 9418, 077 7667108 | T.P. 077 7069934 | T.P :0776701394 |

(C-1177)


## மரண அறிவித்தல்

### செல்வி புஷ்பரட்ணவதி இராசரெத்தினம்



வேலணையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி புஷ்பரட்ணவதி இராசரெத்தினம் (31.05.2008) நேற்றுக் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலணை வைத்தியரும் அதிபருமான சிதம்பரப்பிள்ளை இராசரெத்தினம் - காலஞ்சென்ற ஆசிரியை திருமதி உருக்குமணி தம்பதியரின் அருமை மகளும், பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் (தலைவர், சமூகவியற்றுறை - யாழ்.பல்கலைக் கழகம்), திருமதி புஷ்பா கணேசலிங்கம் (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்-தென்மராட்சி), திருமதி பு.சின்னையா (விரிவுரையாளர்,தேசிய கல்வி நிறுவகம்), திருமதி இராசமலர் சற்குணநாதன் (ஆஸ்திரேலியா), திருமதி சிவமலர் செகராசா (இளைப்பாறிய உப அதிபர்), காலஞ்சென்ற இரா.பாலசந்திரன் (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி), இரா.ஜெயசந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

திருமதி சறோஜா சிவச்சந்திரன் (இயக்குநர் - மகளிர் அபிவிருத்தி நிறுவனம்), சோ.கணேசலிங்கம் (இளைப்பாறிய கொத்தணி அதிபர்), காலஞ்சென்ற த.சின்னையா, க.சற்குணநாதன் (பரிஸ்ரர் ஆஸ்திரேலியா), மாலினி ஜெயசந்திரன் (ஜேர்மனி), திருமதி சிவபாக்கியம் பாலசந்திரன், க.செகராசா (மலேரியா தடுப்பு நிறுவனம்), ஆகியோரின் பாசமிகு மைத்துனியும்,

திருமதி வளர்மதி விவேகானந்தன் (கனடா), க.அருள் (விரிவுரையாளர் - சட்டப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்), கலாநிதி சிவமதி சிவசந்திரன் (பீடாதிபதி - விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), வைத்திய கலாநிதி க.அருள்மொழி (குழந்தை வைத்திய நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை), கலாநிதி க.அருள்ராஜ் (லண்டன்), திருமதி அனுஷா ரவிக்குமார் (கனடா), வைத்தியகலாநிதி கவிதா சூரியகுமார் (லண்டன்), கலாநிதி நர்மதா குருபரன், செல்வி ச.விஜிதா (ஆஸ்திரேலியா), செல்வி செ.அகல்யா (விவசாய பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புச் சித்தியும்,

வைத்திய கலாநிதி யாழினி அரவிந்தன் (கனடா), சி.பாரதி, திருமதி சர்மிளா சிவநாதன், கிருஷ்ணா, ஜெ.ராஜ்குமார், ஜெ.கிரிதரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01.06.2008) ஞாயிற்றுக் கிழமை இல.07, இரத்தினம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்,
பேராசிரியர்
இரா.சிவச்சந்திரன் (சகோதரன்)
தொலைபேசி:-
021 222 2454/021 222 3274

07, இரத்தினம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

(C-1179)

இப்பத்திரிகை வலம்புரி அன்.சோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 01.06.2008 இல அச்சிட்டுவெளியிடப்பட்டது.